# இயற்கைக்கு மேம்பட்டவைகள்

4



சகோ. பிரன்ஹாம் அவர்களின் மேற்கோள்கள்

(படங்களுடன்)

வாஷிங்டனில், ஒரு மார்க்க சம்பந்தமான கலைக்கூட அரங்கத்தில் அது தொங்கிக் கொண்டிருக்கிறது. 'உலக சரித்திரத்தில் இதுவரை எடுக்கப்பட்ட புகைப்படங்களில் இதுவே இயற்கைக்கு மேம்பட்ட புகைப்படம்' என்று குறிப்பு எழுதி வைத்துள்ளனர்



**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

## செய்தி: **ஓர் நீதிமன்ற விசாரணை**, ஏப்ரல் 12, 1964, ஞாயிறு மாலை, பர்மிங்ஹாம், அலபாமா, அமெரிக்கா

*145. இப்போது நேரம் தாமதித்து விட்டது. நான் இன்னுமொரு சாட்சியை அழைக்கட்டும். நாம் அவ்வாறு செய்வோமா? இங்கே ஒரு பன்னிரெண்டு சாட்சிகளின் பெயர்களை எழுதி வைத்துள் ளேன். ஒரு நூறு அல்லது இருநூறு பேரை நம்மால் சாட்சிக்கு அழைக்க முடியும். ஆனால் இன்னும் ஒரு சாட்சியை மட்டும் நான் அழைக்கட்டும். நீங்கள் என்னை மன்னிப்பீர்களானால், நானே அந்த சாட்சியாக இருக்கப் போகிறேன்? (சபையார், "ஆமென்" என்று கூறுகின்றனர் - ஆசிரியர்.) அவருக்காக நான் நிற்க விரும்புகிறேன். அது அவர்களுடைய காலமாக இருந்தது; இப்போது இது நம்முடைய நேரம். அது அவர்களுடைய சாட்சியாக இருந்தது,*

ஆனால் ஒருமுறை சாட்சியின் ஸ்தானத்தை நான் எடுத்துக்கொள்ளட்டும். ஓ, என்னே!

*146.* நான் ஒரு சிறு பையனாக இருந்ததை நினைவு கூருகிறேன். என்னுடைய வாழ்க்கை சரித்திரத்தை நீங்கள் வாசித்திருப்பீர்கள். அந்தச் சரித்திரத்தை நீங்கள் அறிவீர்கள். அங்கே கீழேயிருக்கிற அந்த நதியை நினைவில் வைத்துள்ளேன். ஞாபகத்திற்கு கொண்டு வருகிறேன். அப்போது நான் ஒரு வாலிப பாப்டிஸ்டு பிரசங்கியாயிருந்து, ஞானஸ்நானம் கொடுத்துக் கொண்டிருந்தேன். ஒருநாள் பிற்பகல் வேளையில் பத்தாயிரம் ஜனங்கள் நதிக்கரையில் நின்று கொண்டிருந்தனர்... என்னுடைய முதலாவது மகத்தான எழுப்புதல் கூட்டத்தில் ஏறக்குறைய ஆயிரம் பேர் மனந்திரும்பியிருந்தார்கள். அங்கே, அந்தத் தண்ணீரில் அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்துக் கொண்டிருந்தேன். பதினேழாவது நபருக்கு ஞானஸ்நானம் கொடுப்பதற்காக அவரை தண்ணீருக்குள் வழிநடத்தினேன். அப்போது ஒரு சத்தத்தைக் கேட்டேன். சுற்றுமுற்றும் பார்த்தேன். அது

உஷ்ணமான ஒரு நேரம். அது 1933-ம் வருடம் ஜூன் மாதமாகும். இந்தியானாவில் உள்ள ஜெபர்ஸன்வில்லில் ஸ்பிரிங் தெருவின் அடிவாரத்தில் இது நிகழ்ந்தது. ஒவ்வொருவருக்காய் ஞானஸ்நானம் கொடுத்துக் கொண்டிருந்தேன். நதிக்கரையானது மேலும் கீழுமாக ஜனங்களால் நிரம்பியிருந்தது.

147. இந்த சிறிய பையனோடு வெளியே நடந்தேன். அவனைப் பீடத்தண்டையில் பார்த்தேன். "மகனே, இயேசு கிறிஸ்துவை உன் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்வாயா?" என்று கேட்டேன்.

"நான் ஏற்றுக்கொள்கிறேன்" என்று அவன் கூறினான்.

148. அவனுடைய பெயர் எட்வர்ட் கால்வின் என்பதாகும். "எட்வர்ட், இப்போது நான் என்ன செய்து கொண்டிருக்கிறேன் என்று உனக்குத் தெரியுமா?" என்று கேட்டேன்.

"நான் அதை அறிவேன், சகோ. பிரான்ஹாமே" என்று அவன் கூறினான்.

*149. "நீ இயேசு கிறிஸ்துவை உன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுவிட்டாய் என்பதை இந்த ஜனங்களுக்குக் காண்பித்து, உனக்கு ஞானஸ்நானம் கொடுத்துக் கொண்டிருக்கிறேன். இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உனக்கு ஞானஸ்நானம் கொடுக்கும்போது, நீ அவருடைய நாமத்தைப் பெற்றுக் கொள்கிறாய். புதிய ஜீவியத்திற்காக எழுந்திருக்கிறாய். இந்த இடத்தை விட்டு நீ கடந்து செல்லும்போது, ஒரு புதிய ஜீவனுக்குள் நீ நடக்க வேண்டும். எட்வர்டு, இதை நீ புரிந்து கொண்டாயா?" என்று கூறினேன்.*

*"நான் புரிந்திருக்கிறேன்" என்று அவன் கூறினான். "உன் தலையை தாழ்த்து" என்று நான் கூறினேன்.*

*150. "பரலோகப் பிதாவே, இந்த வாலிப மனிதன் உம்மில் கொண்டுள்ள விசுவாசத்தை அறிக்கை செய்தான். "நீங்கள் உலகமெங்கும் புறப்பட்டுப் போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானம்*

கொடுங்கள்” என்று நீர் எங்களுக்கு கட்டளை கொடுத்தது போல, “நீர் எங்களுக்குப் போதித்த எல்லாவற்றையும் விசுவாசிக்கும்படிக்கு, இவர்களுக்கு கட்டளை கொடுக்கிறேன்” என்று ஜெபித்தேன்.

*151.* “ஆகவே என் அன்பான சகோதரனே, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உனக்கு ஞானஸ்நானம் கொடுக்கிறேன்.”

*152.* அவனை தண்ணீருக்குள் மூழ்கச் செய்தேன். நான் நிமிர்ந்து பார்த்தேன். ஏதோவொன்று, “உஷ்...” என்று போய்க் கொண்டிருந்த ஒரு சத்தத்தைக்கேட்டேன். நான் ஜனக்கூட்டத்தைக் கவனித்தேன். மேலும் அது.. “மேலே நோக்கிப்பார்!” என்று கூறின ஒரு சத்தத்தைக்கேட்டேன்.

*153.* “அது என்ன?” என்று எண்ணினேன். நாங்கள் திருமணம் செய்து கொள்வதற்கு இரண்டு அல்லது மூன்று வருட்களுக்கு முன்பாக, பில்லி, அவனுடைய தாயார். அவள் அங்கே நின்று கொண்டிருந்தாள். அவளுடைய முகத்தைப் பார்த்தேன், அது

(பயத்தினால்) வெளிறிப்போயிருந்தது. அவளுடைய கையில் ஒரு புகைப்படக் கருவி வைத்திருந்தாள்.

154. "மேலே நோக்கிப்பார்!" இந்த சத்தத்தை நான் இரண்டாவது முறையாகக் கேட்டேன். நான் பயந்து நடுக்கமுற்றேன். நான் சுற்றுமுற்றும் பார்த்தேன். அங்கு பார்த்துக் கொண்டிருந்த ஜனங்கள் வாயடைத்துப்போய், பயந்து, திகைத்துக் கொண்டிருந்தார்கள். "மேலே நோக்கிப்பார்!" என்று சொன்ன சத்தத்தை மீண்டும் கேட்டேன்.

155. நான் மேலே நோக்கிப் பார்த்த போது, இஸ்ரவேல் ஜனங்களை வனாந்தர வழியாய் நடத்தின அதே அக்கினிஸ்தம்பம் இங்கே வந்தது. ஆயிரக்கணக்கான கண்கள் அதைக் கண்டன. நான் எங்கே நின்று கொண்டிருந்தேனோ, சரியாக அதே இடத்திற்கு கீழே இறங்கி வந்தது. "கிறிஸ்துவின் முதல் வருகைக்கு முன்னோடியாக, யோவான் ஸ்நானகன் அனுப்பப்பட்டது போல, உன் செய்தியும்

கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்னோடியாக சென்று பூமியை நிரப்பும்" என்று சத்தம் உரைத்தது.

156. அந்நிகழ்வு ஒருங்கிணைந்த பத்திரிகையிலும் (Associated Press), செய்தித்தாளிலும் வெளிவந்தது. முனைவர் லீ வேயில் இங்கே இந்த நாள் பிற்பகல் வேளையில் அதைத் தெரிந்தெடுத்து கனடா மற்றும் அதைச்சுற்றியுள்ள நாடுகளில், "உள்ளூர் பாப்திஸ்து பிரசங்கியார் ஞானஸ்நானம் கொடுத்துக் கொண்டிருந்த போது, அவர் மேல் ஒரு தெய்வீக ஒளி காட்சியளித்தது" என்னும் செய்தியைப் பரப்பினார்.

157. சில வருடங்களுக்கு முன்பாக, ஹூஸ்டன், டெக்ஸாஸ் அல்லது டல்லாஸ், டெக்ஸாஸ் என்னும் இடத்தில் நடந்தது. அதை ஜனங்கள் சந்தேகித்த போது, நான் செய்வதறியாது திகைத்தேன். "தெய்வீக சுகமளித்தல் என்பது ஒன்றும் கிடையாது" என்ற பொருளில் ஒரு நல்ல பாப்திஸ்து பிரசங்கியார் சகோ. போஸ்வர்த்துடன் வாதிட

விரும்பினார். அவர் முற்றிலுமாக அதில் தோல்வியுற்ற போது, "அந்த தெய்வீக சுகமளிப்பவர் வரட்டும், வந்து சுகமாக்குவதை நான் பார்க்க வேண்டும்!" என்று சொல்ல ஆரம்பித்தார். நான் கூறினேன்...

*158.* நான் மாடியின் முகப்பில் இருந்தேன். கீழே இறங்கி வந்தேன். "ஐயா, நான் ஒரு தெய்வீக சுகமளிப்பவன் அல்ல" என்று கூறினேன்.

*159.* (ஒலிநாடாவில் காலியிடம் - ஆசிரியர்.) "....இயேசுவே, ஆம் என்றோ அல்லது இல்லை என்றோ கூறுங்கள்? அவர்களுக்கு உங்களால் பதில் கூற முடியாது. ஒரேயொரு கேள்வி தான். அதுவே போதுமானதாக இருந்தது. அவர் யெகோவா யீரேயாக இருப்பாரானால், அவர் அப்படித்தான் இருக்க வேண்டும்; அவர் அவ்வாறு இல்லையென்றால், அவர் ஒரு இரட்சகரல்ல. உங்களால் பெயர்களைப் பிரிக்க முடியாது. அவர் யேகோவா - ரஃபா,

சுகமாக்குகிறவர்! 'நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்.'"

160. அந்த மனிதனால் அங்கிருந்து நகர்ந்து செல்ல முடியவில்லை. அங்கே நின்று கொண்டு பேசுவதற்கே தடுமாறினார். உங்களில் அநேகர் அங்கிருந்து அதைக் கேட்டீர்கள் என்று அநுமானிக்கிறேன். அத்தகைய வாதம், திரு.போஸ்வர்த்துக்குத் தைரியத்தைக் கொடுத்தது. அது நடந்த போது, அந்த பாப்திஸ்து பிரசங்கிக்கு ஒரு விஷயம் கூட கிடைக்கவில்லை, அது... அங்கிருந்தவர்களெல்லாம் அந்த நகரத்தின் அதிகாரிகளாயிருந்தனர். வேதம் என்ன கூறுகிறது என்பதை அறிந்திருந்தும் கூட எந்தப்பக்கத்திலும் அவர்கள் ஆர்வம் காட்டவில்லை.

அதன் பின்னும், "அவர் வரட்டும்" என்று சொல்லிக் கொண்டே இருந்தார்.

161. நான் மேலே இருந்தது அவர்களுக்குத் தெரியாது. அங்கே என்னுடைய மனைவி மற்றும் சிறிய பெக்கி இவர்களுடன் அமர்ந்திருந்தேன்.

உயர்நிலைப்பள்ளிப்படிப்பை முடித்து, இந்த வருடத்தில் பட்டப்படிப்பு படிக்கிறாள். நான் அங்கே உட்கார்ந்து கொண்டிருந்தேன். அப்போது அவள் ஒரு வயதுடையவளா யிருந்தாள். என்னுடைய கரங்களில் அவளை ஏந்திக் கொண்டிருந்தேன்.

162. "சகோ.பிரான்ஹாம் இந்தக் கூட்டத்தில் இருக்கிறார் என்பதை நான் அறிவேன். அவர் விரும்பினால், வந்து இதை முடித்து வைக்கவும், சரியா" என்று சகோ. போஸ்வெர்த் கூறினார். ஆனால் நான் கூறினேன்... ஒவ்வொருவரும் சுற்றுமுற்றும் பார்க்க ஆரம்பித்தனர்.

163. நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான, ஏறக்குறைய முப்பதாயிரம் ஜனங்கள் அங்கே நின்று கொண்டிருந்தனர். இசை அரங்கத்தில் எண்ணூறு பேரை மட்டுமே கொண்டவர்களாக இருந்தோம். ஜனங்கள் விமானங்கள் மூலமாகவும், தொடர் வண்டிகள் மூலமாகவும் வந்து கொண்டிருந்தனர். வேறு சில வாகனங்கள் மூலமாகவும்.....

*164.* பெந்தேகொஸ்தே குழுவினர் எல்லோரும் அங்கே ஒன்று கூடினர் என்பதை பின்னர் அறிந்துகொண்டேன். ஒரு உபத்திரவம் உண்டாகும்போது, அது ஜனங்களை ஒன்றுகூட்டுகிறது. இதை நீங்கள் நம்ப மாட்டீர்கள், ஆனால் அந்த மணி நேரம் வரும்போது....

*165.* பாருங்கள், ஒருத்துவக்காரர்கள், இருத்துவக்காரர்கள், திரித்துவக்காரர்கள், நான்கத்துவக்காரர்கள் இன்னும் என்ன வெல்லாமோகாரர்கள் எல்லோரும் ஒன்று கூடினார்கள். அவர்கள் அனைவரும் "தெய்வீக சுகமளித்தல்" என்பதில் பொதுவான விசுவாசம் வைத்திருந்தனர். அவர்கள் எல்லோரும் அங்கேயிருந்தார்கள்.

*166.* "ஒருகூட்ட பரிசுத்த உருளைகள் தவிர, தெய்வீக சுகமளித்தல் என்பதை ஒருவர் கூட விசுவாசிக்கமாட்டார்கள்" என்று அந்த மனிதன் கூறினான்.

*167.* ரேமாண்ட் ரிச்சி என்பவர் எழுந்து, "பரிசுத்த உருளைகள் என்று கூறினாயே, அதை எப்படி கூறலாம்?" என்று கேட்டார்.

“பயித்தியக்கார ஜனங்கள் என்று எப்படி கூறலாம்?” என்று கேட்டார்.

அதற்கு அவர், “பாப்டிஸ்ட்” என்றார்.

168. “எல்லாம் சரி. சகோ.பிரான்ஹாம் இங்கு இருந்தபோது, இயேசு கிறிஸ்துவினால் சுகமடைந்ததற்கான மருத்துவ சான்றிதழ் வைத்துள்ளவர்கள் எத்தனை பேர் இக்கட்டிடத்தில் இருக்கிறீர்கள்? உங்களால் அதை காண்பிக்க முடியுமா?” என்று கேட்டார். முந்நூறு பேர் எழுந்து நின்றார்கள். “அதைக் குறித்து என்ன?” பாருங்கள்? ஆகவே சண்டையிடுவதற்கான கோபத்தையுடையவ ரானார்.

169. நான் கீழே இறங்கி நடக்க வேண்டும் என்று நினைத்தேன். “கீழே இறங்கி செல்” என்று பரிசுத்த ஆவியானவர் கூறும் சத்தத்தை கேட்டேன். நான் கவனித்தேன். நான் எங்கேயிருந்தேனோ அங்கே அந்த ஒளி தொங்கிக் கொண்டிருப் பதைக் கண்டேன். கீழே இறங்கி அங்கு சென்றேன்.

*170. “அந்த வரம் கேள்விக்குறியாக இருந்தால், அது வேறு காரியம். ஆனால் நான் ஒரு சுகமாக்குகிறவர் அல்ல. தேவனே சுகமாக்குகிறவர்” என்றேன். “நான் தேவனுக்காக சாட்சி கொடுப்பேனேயானால், தேவனும் எனக்காக சாட்சி கூறக் கடமைப்பட்டு இருக்கிறார்” என்று கூறினேன்.*

*171. இப்பொழுது, டக்ளஸ் புகைப்படக்கூடத்தை சார்ந்தவர்கள் அங்கே மிகப்பெரிய புகைப்படக் கருவியை வைத்திருந்தனர். அந்த ஊழியக்காரர், “அந்த வயதான மனிதனை சில புகைப்படம் எடுங்கள்; அவருடைய தோலை உரித்து காட்டப்போகிறேன். அவருடைய மறைவிடத்திலிருந்து அவரை இப்பக்கமாக வெளியே இழுக்கிறேன், அவருடைய தோலை என்னுடைய படிக்கும் அறையின் கதவில் தொங்க விடுகிறேன். தெய்வீக சுகமளித்தல் என்பதற்கான ஒரு ஞாபகக்குறியாக அது இருக்கும்” என்று கூறினார். ஒரு கிறிஸ்தவன் இன்னொரு கிறிஸ்தவரைப்பார்த்து இவ்வாறு கூறுவதை*

உங்களால் கற்பனை செய்து பார்க்க முடிகிறதா? பாருங்கள், உங்கள் கனிகளினால் நீங்கள் அறியப்படுவீர்கள். ஆகவே, அவன் அவ்வகையான ஆறு புகைப்படங்களை எடுத்தான். அவர் தன் கைவிரல்களை மடக்கிக்கொண்டு சகோ.போஸ்வர்த்தினுடைய மூக்குக்கு கீழே வைத்து, வாக்குவாதத்தைத் தொடங்குவதற்கு முன், (அவரைக் குத்துவது போல வைத்து), "இவ்விதமாக புகைப்படம் எடு" என்று கூறினார். அவனும் அவ்விதமாக எடுத்தான். சகோ.போஸ்வர்த் சாதாரணமாக அங்கு அமர்ந்திருந்தார்.

172. அது என்னவென்று உங்களுக்குத் தெரியுமா? அதை எடுத்துக்கொண்டு புகைப்படக்கூடத்திற்கு சென்று பரிசோதித்த போது அதில் ஒரு படம் கூட இல்லை. ஒவ்வொரு படமும் மிகச்சரியாக அழிக்கப்பட்டு போயிற்று. ஒரு கடவுள் நம்பிக்கையற்ற மனிதன், தன்னுடைய விரலை ஒரு தேவனுடைய மனுஷனுடைய மூக்கின் கீழ் இவ்விதமாக வைப்பதற்கும், அதை புகைப்படம் எடுப்பதற்கும் தேவன் அனுமதிக்க மாட்டார்.

*173. நான் அங்கு நின்று கொண்டிருந்தேன். "தேவனுடைய வரமாகிய பகுத்தறிதலைக்குறித்த கேள்வியானால், அது வேதத்தில் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டுள்ளது. அதை நிரூபிக்க முடியும். அதை நிரூபிக்க முடியும்" என்று கூறினேன்.*

*ஆனால் நான், "என்னைப் பொருத்தமட்டில் நான் சுகமாக்குகிறவன் அல்ல, இல்லை ஐயா, நான் சுகமாக்குகிறவன் இல்லை ஐயா" என்று கூறினேன்.*

*174. "ஒரு மனிதன் என்ற முறையில் உங்களுக்கு மரியாதை செலுத்துகிறேன். ஆனால் ஊழியக்காரன் என்ற முறையில் உங்களைக் குறித்து நான்-நான் அதிகமாக நினைப்பதில்லை" என்று அவர் கூறினார்.*

*175. நான், "எனக்குக் கொடுக்கப்பட்ட வெகுமதிகளையெல்லாம் நான் திருப்பிக் கொடுத்து விடுகிறேன்" என்றேன். இவ்வாறு நான் அந்த இடத்தை விட்டு நடந்து சென்றேன்.*

*176. ஆகவே, "(சுகமாக்குதல்) நடப்பதைக் காண விரும்புகிறேன். யாரோ ஒருவரை நீர் மனோவசியப்படுத்துவதைப் பார்க்க விரும்புகிறேன். இன்றிலிருந்து ஒரு வருடம் கழித்து என்ன நடக்கிறது என்று பார்க்கட்டும்" என்று கூறினார். அவர் சுற்று முற்றும் பார்க்க ஆரம்பித்தார்.*

*177. "தேவனுக்காக நான் பேசுவேன் என்றால், தேவன் எனக்காக பேசுவதற்குக் கடமைப்பட்டுள்ளார்" என்றேன். அதைக் காட்டிலும் மேலான வார்த்தைகள் எதுவும் பேசவில்லை. அந்த சுழற்காற்று இங்கேயும் வந்தது. சபையார் கூடியிருந்த அந்த இடத்தில் இறங்கி வந்தது. அங்கேயே அக்கினிஸ்தம்பம் வந்தது. அந்தப் பெரிய புகைப்படக்கருவி அதைப் படமெடுத்தது.*

*178. துப்பறியும் ஸ்தாபனத்தின் தலைமை அதிகாரி ஜார்ஜ். ஜெ. லேஸி, கைரேகை ஆவணங்களை பரிசோதித்துப் பார்க்கக் கூடியவர். அந்த நாளின் நடு இரவில் அதை எடுத்துக்கொண்டு போனார். அவர்கள் அதை எல்லாவித*

சோதனைகளுக்கும் உட்படுத்தினர். அதில் ஒன்றில் மட்டுமே படம் இருந்தது. நீங்கள்....

*179. உங்கள் வீட்டில் உள்ள அலமாரியில் எத்தனை பேர் அந்தப்படத்தை வைத்துள்ளீர்கள்? பாருங்கள்? வாஷிங்டனில், ஒரு மார்க்க சம்பந்தமான கலைக்கூட அரங்கத்தில் அது தொங்கிக் கொண்டிருக்கிறது. "உலக சரித்திரத்தில் இதுவரை எடுக்கப்பட்ட புகைப்படங்களில் இதுவே இயற்கைக்கு மேம்பட்ட புகைப்படம்" என்று குறிப்பு எழுதி வைத்துள்ளனர்.*

*180. அது என்ன? அதைக் கவனியுங்கள்! அதை இந்த வாரத்தில் கவனியுங்கள். அதைச் செய்தது எது என்று பாருங்கள். "நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர்!" எனக்கு இப்போது பத்தாயிரம் நாவுகள் இருந்தாலும், அவரைக் குறித்து என்னால் பேசி முடியாது. ஆம், ஐயா.*

★★★★★

# வலிப்பு நோய் விலகியது

வில்லியம் மரியன் பிரன்ஹாம்

183. இப்பொழுது, இதோ ஒரு சீமாட்டி இருக்கிறார்கள், அவர்களை எனக்குத் தெரியாது, நான் அவர்களை என்னுடைய ஜீவியத்தில் ஒருபோதும் கண்டதேயில்லை. நாங்கள் இருவரும் தேவனுக்கு முன்பாக இங்கே நின்று கொண்டிருக்கிறோம், மரித்துப் போய் விழவும் முடியும், சரியாக இப்பொழுதே பக்கவாதம் தாக்கலாம். நான் கூட்டங்களில் அது சம்பவிப்பதைக் கண்டிருக்கிறேன். அது கூட்டங்களில் சம்பவிப்பதை எத்தனை பேர் எப்பொழுதாவது கேள்விப்பட்டிருக்கிறீர்கள்? என்னை ஹிப்னாடிஸம் செய்வதற்காக அந்த ஆள் வந்து, அந்த இரவில் அவன் அங்கே மேலே பால்(கனி)...யில் உட்கார்ந்து கொண்டிருந்ததை எத்தனை பேர் கேள்விப்பட்டிருக்கிறீர்கள்? அவன் அங்கே கீழே வந்து, என்னை ஹிப்னாடிஸம் பண்ணி, என்னை ஒரு நாயைப் போன்று குரைக்கச் வைக்கப் போவதாய் இருந்தான். பரிசுத்த ஆவியானவர் மறுபக்கம் திரும்பி, "பிசாசின் மகனே" என்றார். அவன் அந்த நேரம் முதற்கொண்டு பக்கவாதத்தினால் தாக்கப்பட்டான். அது ஏறக்குறைய மூன்று வருடங்களுக்கு முன்பு நடந்ததாகும், பாருங்கள். அவர்கள் அவனை கட்டிடத்தை விட்டு வெளியே தூக்கிச் சென்றனர். உங்களால் தேவனோடு விளையாட முடியாது. நீங்கள் அதை விசுவாசித்தாக வேண்டும்.

184. ஒரு ஊழியக்காரர் ஒரு சபைக் கூட்டத்தினரைக் கொண்டு வந்தார், வலிப்பு நோயினால் அவதிப்பட்ட ஒரு பிள்ளையினிமித்தம் அவர்கள் தங்களுடைய தலையை தாழ்த்திக் கொண்டிருக்க வேண்டுமென்று நான் அவர்களிடம் கேட்டுக் கொண்டேன், அந்தப் பிள்ளை

தன்னுடைய நாவைத் தொடர்ந்து கடித்துக் கொண்டிருந்தது; அவர்கள் அதனுடைய வாயில் ஒரு குச்சியை வைத்திருந்தனர்... அல்லது, துணிகளைக் துவைத்துக் காயப் போடும் போது, அதை பற்றிப்பிடிக்க வைக்கும் கிளிப்போடு (clothespin), அதில் ஒரு துணியையும் வைத்து, அதனுடைய வாயில் வைத்திருந்தனர் அது ஆர்கன்ஸாஸிலுள்ள ஜோன்ஸ்பரோவில் நடந்த சம்பவமாகும். அவன் அவ்விதமாக இந்த நாவைத் தொடர்ந்து கடிக்க முயற்சித்துக் கொண்டிருந்தான், அப்போது மேடையிலேயே அந்தப் பிள்ளைக்கு சிறிது நேரம் உணர்விழப்பு ஏற்பட்டது. நான், "இப்பொழுது, நீங்கள் எல்லாரும் உங்களுடைய தலையை கீழே தாழ்த்தி இருங்கள்" என்று கூறி விட்டு, நான் ஜெபிக்கத் துவங்கினேன். அவர்களோ தங்கள் தலையைத் தாழ்த்தி வைக்கவில்லை. நான் தொடர்ந்து சுற்றிலும் நோக்கிப் பார்த்து, "உங்கள் தலையை உயர்த்தியிருப்பவர்கள், உங்களுடைய தலையை கீழே தாழ்த்தி விடுங்கள்" என்று கூறினேன்.

185. நான் ஜெபிக்கத் துவங்கினேன், அவர்களோ தங்களுடைய தலையைத் தாழ்த்தவில்லை. நான் சுற்றும் முற்றும் திரும்பிப்பார்த்தேன், அங்கே ஒரு ஆள் இவ்விதமாக தன்னுடைய தலையை வைத்துக் கொண்டு பின்னால் உட்கார்ந்து கொண்டிருந்தான், ஏறக்குறைய எட்டு அல்லது பத்து பேர் அவனோடு இருந்தனர், அல்லது அதற்கும் அதிகமான பேர் இருந்தனர். நான்,

“ஐயா, உம்முடைய தலையை கீழே தாழ்த்தி வையும்” என்றேன்.

அவன், “இது ஒரு பொது இடம், நான் அப்படி செய்ய வேண்டியதில்லை” என்றான்.

நான், “சரி, அப்படியானால், அது உம்மைப் பொறுத்தது” என்று கூறி விட்டு, “பிதாவே, அந்த மனிதனின் நிலையின் நிமித்தமாக இந்த அப்பாவி பிள்ளை அவதிப்பட அனுமதியாதேயும்” என்றேன்.

186. இது சரியா இல்லையா என்று ஆர்கன்ஸாஸிலுள்ள ஜோன்ஸ்போரோவில் இருக்கும் பழைமை நாகரீகமான வேதாகம வேளை கூடாரமாகிய ஜோன்ஸ்போரோ கூடாரத்தைச் சேர்ந்த ரிச்சர்ட் T. ரீட் (Richard T. Reed) அவர்களைக் கேட்டுப்பாருங்கள். லிட்டில் ராக்கிலுள்ள, 505, விக்டர் தெருவைச் சேர்ந்த G. H. பிரெளன் அவர்களைக் கேட்டுப் பாருங்கள், அவர் அங்கே இருந்தார்.

187. அந்த வலிப்பு நோய் அந்தப் பிள்ளையை விட்டு விலகியது, ஒரு குறிப்பிட்ட ஸ்தாபனத்தைச் சேர்ந்த 28 பேர்... மேய்ப்பரும் அந்த எல்லா 28 பேரும் வலிப்பு நோயை வாங்கிக் கொண்டார்கள், அவர்கள் வாயில் நுரை தள்ளியபடி, சரியாக அங்கே சபையோர் இருந்த இடத்திலேயே தரையில் விழுந்தார்கள். நான் அறிந்துள்ள வரைக்கும், அவர்கள் இன்னும் அதை வைத்திருக்கிறார்கள். அவர்களில் அநேகர் வந்தார்கள், நான், “எனக்கு அதனோடு எந்த சம்பந்தமும் கிடையாது, அது ஒரு தேவனுடைய சாபம், எனவே அது உங்களைப்

பொறுத்தது. கீழ்ப்படியாமலிருந்தவன் நீ தான். உனக்கு விசுவாசம் இல்லை என்றால், கூட்டத்தை விட்டு வெளியே போகவும், அதைச் செய்ய வேண்டாம் என்றும் நான் உன்னிடம் கேட்டுக் கொண்டேனே. இப்பொழுது, அது உன்னைப் பொறுத்தது. எனக்கு அதனோடு எந்த சம்பந்தமும் கிடையாது; நான் அந்த பாவத்திற்காக ஜெபிக்க மாட்டேன். இல்லை, ஐயா. அது உன்னைப் பொறுத்தது" என்று கூறி விட்டேன்.

***செய்தி:*** ஆபிரகாமோடு தேவனுடைய உடன்படிக்கை, ஏப்ரல் 28, 1956

★★★★★

*(குறிப்பு: இந்தச் செய்தியின் இறுதி திருத்தம் இன்னும் முடியவில்லை. இது புத்தகமாக அச்சிடும் போது, இறுதி திருத்தம் செய்து வெளிவரும்.)*

# வெளவாலின் வழிவத்திலும், ஆமை போன்றும்

வில்லியம் மரியன் பிரன்ஹாம்

ஒருஇரவில், நான், "பிசாசியலின்" பேரில் பேசப் போவதாக உங்களிடம் கூறினேன். இந்த அடுத்த சில நிமிடங்கள், நான், "பிசாசியலின்" பேரில் பேச விரும்புகிறேன். அடுத்த...

நான் ஒரு புத்தகத்தை எழுதிக் கொண்டிருக்கிறேன், என்னால் கூடுமானால். நீங்கள்... உங்களால் அதை வாசிக்க முடியுமா இல்லையா என்று தெரியவில்லை, ஆனால் அந்த - நான் அதை எழுதும் போது, அது பிசாசியலின் பேரில்: பிசாசுகளோடு என்னுடைய தனிப்பட்ட தொடர்புகொள்ளுதல்களின் பேரிலான ஒரு புத்தகம்.

நண்பர்களே, நீங்கள் இருப்பது எவ்வளவு உண்மையோ, அப்படியே அவைகள் இருப்பதும் அவ்வளவு உண்மையாக இருக்கின்றன. அநேக நேரங்களில், அவைகள்... புறப்பட்டுப் போகும்போது, நான் அவைகளைக் காண்கிறேன். சரியாக இங்கே இந்த மேடையிலிருந்தே அவைகள் புறப்படுவதை நான் கண்டிருக்கிறேன். நான் அவைகளைக் காண்கிறேன், அவைகளில் சில வெளவாலின் வடிவத்திலும், தங்கள் கால்களின் மேல் நீண்ட மயிர்கள் (long hairs) தொங்கிக் கொண்டிருப்பது போன்றும் இருக்கின்றன. ஆனால் ஒரு காக்காய் வலிப்பு நோய் பிசாசானது (epileptic demon), வட்டமான கால்கள் அவ்விதமாக அந்தரத்தில் தொங்கிக் கொண்டிருக்கும் ஒரு ஆமை போன்று காணப்படுகிறது. ஆனால் பொதுவாக, அநீதி, (oppression - அட்டூழியம், கொடுமை, அடக்குமுறை, கொடுங்கோன்மை, தாங்கொணாத்துன்பம், கொடுஞ்செயல், உபத்திரவம் -

தமிழாக்கியோன்.) செய்யும் பிசாசானது அதிகமாக, ஒரு-ஒரு மேகத்தின் வடிவத்தில் (cloud form), ஒரு அலையைப் போன்று இருப்பதாகக் காணப்படுகிறது; மேலும் அது ஒரு... நீங்கள் அந்த வேறு பரிமாணத்தில் அந்த ஆவியைக் காணும்போது, அது அப்படியே மிகவும் வினோதமான ஒலியை எழுப்புகிறது.


இப்பொழுது, அது தவறு என்று நீங்கள் நினைக்கலாம், ஆனால் இந்நாட்களில் ஒன்றில் நீங்கள் அதைத் தெளிவாக அறிந்து கொள்வீர்கள். நீங்கள் மாத்திரம் ஆவிக்குரியவைகளைக் காண்கிற கண்ணாடியை எடுத்து, உங்கள் ஆத்துமாவுக்குள் அலசியாராய மாத்திரம் கூடுமானால். நீங்கள் சந்தேகிப்பீர்களானால், அது எதைப்போன்று காணப்படுகிறது என்பதைக் கண்டுகொள்வீர்கள். மிகப்பெரிய பிசாசு, பிசாசுகளுக்கெல்லாம் தலைமைப் பிசாசு அவிசுவாசம் தான். அங்கேயிருக்கும் ஒரே பாவம் அதுதான். அவிசுவாசத்தைத் தவிர வேறு எந்தப் பாவமும் கிடையாது. இந்த எல்லா சிறு ஒழுக்கம் சார்ந்தவைகளும் மற்றும் காரியங்களும்: புகைப்பிடித்தல், மது அருந்துதல், சூதாட்டம், விபச்சாரம் செய்தல்; அவை வெறுமனே தன்மைகளாக இருக்கின்றன. நீங்கள் விசுவாசியாத காரணத்தினால் தான் அதைச் செய்கிறீர்கள், அவிசுவாசம் தான், நீங்கள் அதைச் செய்யும்படி செய்கிறது. நீங்கள் ஒரு விசுவாசியாக இருந்திருந்தால், நீங்கள் அதைச் செய்திருக்க மாட்டீர்கள். அது சரியே.

***செய்தி:*** பிசாசியல், நவம்பர் 12, 1953

★★★★★

*(குறிப்பு: இந்தச் செய்தியின் இறுதி திருத்தம் இன்னும் முடியவில்லை. இது புத்தகமாக அச்சிடும் போது, இறுதி திருத்தம் செய்து வெளிவரும்.)*

# குருடான மனிதன் பார்வையடைதல்



**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

# செய்தி: பதினோராவது கட்டளை, பத்தி எண் 6

அடுத்த இரவில் மிகவும் வயது சென்றிருந்த சுருக்கம் நிறைந்த முகத்தைக் கொண்ட ஒரு மனிதனை என்னிடமாகக் கொண்டு வந்தார்கள். அந்த மனிதனுடைய துணிகள் மிகவுமாக கிழிந்த நிலையில் காணப்பட்டது. அந்த மனிதன் எனக்கு முன்பாக நின்று உருள் மணிகளைக் கொண்ட ஒரு ஜெப மாலையை எடுத்து ஜெபிக்க ஆரம்பித்தார். நான், "என் சகோதரனே அதை எறிந்து விடுங்கள், அது இப்பொழுது உங்களுக்குத் தேவைப்படாது" என்று கூறினேன். ஓ. எவ்வளவாக அந்த வயதான மனிதனை நான் நேசித்து அந்த மனிதனுக்காக வருத்தப்பட்டேன் - அப்பொழுது அந்த மனிதனுடைய மெலிந்த பாதத்தை நான்

பார்த்தேன், அவை காலணிகள் இல்லாதிருந்தன, அவருடைய கால் சட்டைகள் மிகவும் கிழிந்த நிலையில் இருந்தன. இப்படிப்பட்ட பரிதாபத்திற்குரிய நிலையில் அந்த மனிதன் காணப்பட்டார், இயற்கையும் கூட அந்த மனிதனுக்கு எதிராக செயல்பட்டது என்பதை என்னால் நம்பவே முடியவில்லை - அந்த மனிதன் முற்றிலும் பார்வை இழந்த குருடராக இருந்தார்! இதை நான் கண்ட உடனே என் இருதயம் முழுவதுமாக கடலின் பேரலைப் போன்று அன்பும், இரக்கமும் பாய்ந்தோடியது, நான் மேலே தேவனை நோக்கி, “இயேசுவே இந்த வயது சென்ற குருடான தந்தையின் மீது தயவுகூர்ந்து இரக்கம் பாராட்டும். பிதாவே, நீர் இவருக்கு உதவக்கூடுமா?” என்று நான் கதறினேன். அப்பொழுது அந்த மனிதன், “மகிமை, அடியாஸ் (Adios)” என்று

கூறினார். அவருடைய முழு பார்வையும் திரும்பவுமாக வந்தது. அது என்னவாயிருந்தது. அது தான் அவருடைய பாடுகளின் ஐக்கியத்துக்குள்ளாகச் செல்லுதல். நீங்களும் அதைச் செய்தாக வேண்டும்! நான் ஒருவருக்காக ஜெபித்து அது எனக்கு வெற்றியாக அமைந்திருக்குமென்றால், அது நான் அவர்களுடன் ஐக்கியத்திற்குள்ளாகி அவர்களுடைய பெலவீனங்களை உணர்ந்து, அவர்களுடைய நிலையை உணரும் போது தான்; அப்பொழுது உங்களுக்குள் இருக்கின்ற ஒன்று உங்கள் சிந்தைக்கு அப்பால் இயங்கி வியாதியஸ்தருக்காக விசுவாச ஜெபத்தை ஏறெடுக்கின்றது; நீங்கள் அந்த மனிதனின் நிலையை நினைத்துப் பார்க்க வேண்டும், நீங்கள் அந்த மனிதனுக்காக பரிதபிக்க

வேண்டும், நீங்கள் அந்த மனிதனுக்கு உதவுவதற்கு முன்னர் அந்த மனிதனுடன் நீங்கள் தரித்திருக்க வேண்டும்..... அப்பொழுது நீங்கள் ஒரு விதமான ஆழத்திற்குள் செல்கிறீர்கள்..... அது தான் மானிட அன்பைக் காட்டிலும் அதற்கு மேலாக இருக்கின்ற தேவனுடைய அன்பு.

★★★★★

# ஒரு கறுத்த நிழலாக

**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

7. ஆனால் மேடையின் மேல் அநேக, அநேக நேரங்களில், நபரை விட்டு வெளியேறுகிற ஆவியைக் காண்கிறேன். அவைகள் எல்லாவிதமான வடிவங்களிலும் இருக்கின்றன. பிசாசுகளோடு தனிப்பட்ட முறையில் நான் தொடர்பு கொள்வதைக் குறித்து, அதைக் குறித்து நானாகவே அறிந்திருப்பவைகளைப் பற்றி, பிசாசியலின் பேரில் ஒரு புத்தகத்தை தயார் செய்து வருகிறேன்; அவைகள் ஜீவனுள்ளவைகளாக இருக்கின்றன. கிறிஸ்தவ விஞ்ஞானம் கூறுவது போன்று, அவைகள் வெறும் எண்ணம் அல்ல. அது உண்மையாகவே ஒரு ஜீவனாக இருக்கிறது. அது நபரைவிட்டு வெளியேறும் போது, நீங்கள் அதை ஒரு கறுத்த நிழலாகக் காணலாம். நான்-நான் அவைகளைக் கண்டிருக்கிறேன், அவைகளில் சில ஏறக்குறைய அவ்வளவு நீளமுடைய வௌவால்களைப் போன்று காணப்படுகின்றன, அவைகள் கீழே தொங்கிக் கொண்டிருக்கும் நீளமான மயிர்களை உடையவைகளாக இருக்கின்றன. நான் அதைப்போன்று அவைகளைக் கண்டிருக்கிறேன், அவைகள் ஆமைகளைப் (tortoises) போன்றோ, ஐம்பது பவுண்டுகள் (சுமார் 23 கிலோகிராம் - தமிழாக்கியோன்), அல்லது ஏதோ ஓர் அளவு எடை கொண்ட, மகத்தான பெரிய சிலந்திகளைப் (spiders) போன்றோ காணப்பட்டதை நான் கண்டிருக்கிறேன், அவைகள் மகத்தான பெரிய நிழலைப் போன்று, ஜனங்களை விட்டு வெளியேறுகிறது. வழக்கமாக, அது காக்கைவலிப்பாக இருக்கிறது.

***செய்தி:*** பிசாசியல், நவம்பர் 20, 1953

★★★★★

*(குறிப்பு: இந்தச் செய்தியின் இறுதி திருத்தம் இன்னும் முடியவில்லை. இது புத்தகமாக அச்சிடும் போது, இறுதி திருத்தம் செய்து வெளிவரும்.)*

**அவர் செய்கிற காரியங்கள் அது எல்லையற்றது. அது என்ன? அது இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராய் இருக்கிறார் என்பதைக் காட்டுகிறது**



**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

## செய்தி: எங்கள் நம்பிக்கை தேவனிடத்தில் இருக்கிறது,
செப்டம்பர் 29, 1951

கடந்த மாலையில், நாங்கள் வீட்டை அடைந்த போது, எங்களுக்கு மிகவும் துயரமான செய்தி கிடைத்தது. என்னுடைய மனைவி இங்கே குழந்தையோடு எனக்கு முன்பாக உட்கார்ந்து கொண்டிருக்கிறாள். எங்களுக்கு ஏறக்குறைய 6 மாத சிறு குழந்தை ஒன்று வீட்டில் இருக்கிறது, அந்த சிறு குழந்தையை விட்டு வருவதென்பது எவ்வளவு கடினமான காரியம் என்று உங்களுக்குத் தெரியாது. விளங்கிக் கொள்ள முடியாத சிறிய தலை அவளுக்கு இருந்தது; அன்றொரு நாள், அவள் அதை என்மேல் இந்தவிதமாக

வைத்தாள், அப்போது என்னுடைய இருதயத்தின் உட்புறம் முழுவதும் என்னை விட்டு வெளியே போனது போல உணர்ந்தேன். நான் அவளை என் முழு இருதயத்தோடும் நேசிக்கிறேன்.

கடந்த இரவில் யாரோ ஒருவரிடமிருந்து, அந்தச் செயலாளரிடமிருந்து எங்களுக்கு ஒரு கடிதம் கிடைத்தது, "குழந்தை வியாதியாயிருக்கிறது" என்று அந்தக் கடிதத்தில் எழுதப்பட்டிருந்தது. நிச்சயமாகவே, அந்த தாய் எப்படி உணர்ந்திருப்பாள் என்பது உங்களுக்குத் தெரியும்; அவள் அப்படியே ஏறக்குறைய பய உணர்ச்சி பெருக்கோடு பயந்து கொண்டிருந்தாள். குழந்தையானது ஒரு போனில் பேசும் தூரத்திலிருந்து மிக தூரத்தில் வசித்து வந்த பாட்டியோடு தங்கியிருந்தது. நான், "நல்லது, இது

கிட்டத்தட்ட நடுஇரவு நேரமாக உள்ளது; இன்றிரவு தொலைபேசியில் அழைக்க வேண்டாம், காலையில் அழைக்கலாம்" என்றேன்.

34. நாங்கள் அப்படியே கொஞ்ச நேரம் அங்கேயே படுத்திருந்தோம்; என்னால் தூங்கச் செல்ல முடியவில்லை. என்னுடைய மனைவியின் மூச்சு சத்தம் மெதுவாக ஆகி வர, பின்பு இயல்பாகவே ஆகி விட்டதை நான் கேட்டேன். எனவே நான் மேலே நழுவி வேறொரு அறைக்குள் சென்று, முழங்கால்படியிட்டு ஜெபிக்கத் தொடங்கினேன். ஏறக்குறைய இன்று காலை 3 மணியளவில், நான் அந்த அறைக்குள் நோக்கிப் பார்த்தேன், அப்போது யாரோ ஒருவர் என்னிடம் வந்து என்னுடைய குழந்தையை என்னிடம் தருவதை நான் கண்டேன்.

அது மூச்சு திணறிக் கொண்டிருந்தது, அதனுடைய சிறிய முகம் சிவந்து போயிருந்தது; அவனுடைய சிறிய கண்கள் கடினமடைந்து இருந்தது. அவன் மூச்சு திணறிக் கொண்டிருந்தான்; அவனால் தன்னுடைய மூச்சைப் பிடித்துக் கொள்ள முடியவில்லை, ஒவ்வொருவரும் உணர்ச்சிவசப்பட்டவர்களாய் இருந்தனர். அவர்கள் அதை என்னிடம் கொடுத்தனர், நான் அதை என்னுடைய கரங்களில் வைத்துக் கொண்டு, “ஓ, தேவனே, என்னுடைய குழந்தை சாகும்படி விட்டு விடாதேயும்; அதற்கு ஜீவனைக் கொடும். அப்படி செய்வீரா, கர்த்தாவே?” என்றேன்.

ஏறக்குறைய அந்த நேரத்தில், அது தன்னுடைய மூச்சை பிடிக்கும் சத்தத்தைக் கேட்டேன், அது என்னை

நோக்கிப் பார்த்தது, அப்போதே அது சுகமாகி இருந்தது. நான் அதைத் திரும்பக் கொடுத்தேன், கர்த்தருடைய தூதனானவர் அறைக்குள்ளிருந்து பேசி, "குழந்தை வியாதிப்பட்டிருந்த செய்தி காலையில் உனக்குக் கிடைக்கும், ஆனால் அது இப்பொழுதோ சரியாகி விட்டது" என்று கூறினார்.

நான் அப்படியே சற்று நேரம் காத்திருந்து விட்டு, பின்பு உறங்கி விட்டேன். இன்று காலை ஏறக்குறைய 9 மணிக்கு விழித்தேன்; மனைவி அறைக்குள் வந்து, அவள், "நான் தொலைபேசியில் அழைக்கப் போகிறேன்... நான் இப்பொழுதே தொலைபேசியில் அழைத்து குழந்தையைக் குறித்து அறியப்போகிறேன்" என்றாள்.

நான், "தேனே, நீ அழைக்க வேண்டியிருக்காது. ஆனால் இந்தப் பெண் அதைக் குறித்து காண்பதற்காக போகும் போது, இதோ உனக்கு இந்தச் செய்தி கிடைக்கப் போகிறது. அந்தப் பெண், 'குழந்தை மிக மோசமாக வியாதிப்பட்டிருந்தது, ஆனால் அது இப்பொழுது சுகமாகி விட்டது. நேற்றிரவு தேவன் அதைச் சுகமாக்கினார்' என்று கூறப் போகிறாள்" என்று கூறினேன்.

35. எனவே அவள் தொலைப்பேசியில் அழைத்தாள்; என்னுடைய சிறு பையன் பில்லி பாலும் அவர்கள் எல்லாருமே தொலைபேசியைச் சுற்றிலும் கூடி விட்டனர், நான், "இந்த வார்த்தைகளை வார்த்தைக்கு வார்த்தை கவனியுங்கள்" என்றேன். எனவே இவள் அழைக்க அந்தப் பெண் தொலைபேசியை

எடுத்தாள், இவள், "நீ அந்த வயல் நிலத்தைக் கடந்து சென்று, குழந்தையைக் குறித்து பாட்டியிடம் கேள்(விசாரி)" என்று கூறினாள்.

அவள், "குழந்தை மிக மோசமாக வியாதிப்பட்டிருந்தது, ஆனால் இன்று காலையில் அதெல்லாம் சரியாகி விட்டது" என்று கூறினாள்.

அப்படியே வார்த்தைக்கு வார்த்தை. ஓ, நண்பனே, அதை வெளிப்படையாகக் கூற அதிக மணி நேரங்கள் பிடிக்கும்; என்னால் அதைச் செய்ய முடியவில்லை; அவர் செய்கிற காரியங்கள் அது எல்லையற்றது. அது என்ன? அது இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராய் இருக்கிறார் என்பதைக் காட்டுகிறது. அங்கே முற்காலத்திலிருந்த எலியாவோடு இருந்தவர், தேவ குமாரனாகிய இயேசு

கிறிஸ்துவின் மேல் இருந்தவர், இன்றிரவு சபையிலும் இருக்கிறார், பரிசுத்த ஆவியானவர் ஒவ்வொரு இருதயத்தின் இரகசியத்தையும் அறிந்து, அது அப்படியே என்னவாக இருக்கும் என்பதையும் அறிந்து கொள்கிறார். நீங்கள் அதை விசுவாசிக்கிறீர்களா? நாம் நம்முடைய தலைகளைத் தாழ்த்துவோம்.

★★★★★

# ஒரு மனிதன் புற்று நோயிலிருந்து சுகமடைதல்



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# செய்தி: ஓர் பரிபூரண மனிதனின் வளர்ச்சி, அக்டோபர் 14, 1962 காலை, பத்தி எண் 422-430

அன்றிரவு நான் ஒரு இடத்துக்கு அழைக்கப்பட்டேன். ஒரு வாலிபன். நீங்கள் சூப்பர் மார்கெட் என்றழைக்கும் இடத்தில் நான் அவனிடம் பேசினேன். அநேக வருடங்களுக்கு முன்பாக அந்த மனிதனிடம் நான் பேசியிருக்கிறேன். அவன் ஒரு குடிகாரனாக மாறியிருந்தான். அவன் ஒரு நல்ல மனிதன்தான், ஆனால் பாவியாயிருந்தான். அவனுடைய தாய்தான் என்னை அழைத்திருந்தார்கள், அவர்கள் பலதடவை மருத்துவருக்காக தொடர்பு கொண்டு பின்பு என்னிடம் தொடர்பு கொண்டார்கள். அவர்கள் பில்லியைக் கூப்பிட்டார்கள் என்று நான்

நினைக்கிறேன்... நான் அந்த அழைப்பைப் பெற்றபோது, உண்மையாகவே நான் கூறுகிறேன், இந்த வாலிபனிடத்திற்கு நான் வந்து சேர ஏற்பட்ட போராட்டம் போல் என் ஜீவியத்தில் எப்பொழுதும் ஏற்பட்டதில்லை.

நான் அங்கு போய்ச் சேர்ந்த பொழுதோ, அந்த பரிதாபமான வாலிபன் என்னை நினைவுப்படுத்திக்கொள்ளும் சூழ்நிலைக்கு அப்பாலிருந்தான். அங்கே அவன் சுயநினைவின்றி படுத்திருந்தான். 51 வயது நிரம்பியிருக்கும். அவனுடைய தகப்பனார் தன் மகனை தோளில் தட்டி, “என் தேனே, அமாந்திரு” என்று கூறினார். அவன் எழுந்திருக்க முயற்சித்தான். அவனுடைய கைகள் இதைப் போன்றிருந்தன. அந்த வாலிபனின் முழு சரீரமும் அவனுடைய அவயங்கள் யாவும் புற்று நோயால்

பீடிக்கப்பட்டிருந்தது. அவனுடைய இரத்தத்திலும் கூட புற்றுநோய் நிறைந்து காணப்பட்டது. அவன் எழுந்துகொள்ள முயற்சித்துக் கொண்டிருந்தான்.

நான் அவனுடைய கையைப் பிடித்து, "ஹூட்ரோ, ஹூட்ரோ நான் தான் பிரான்ஹாம்" என்று கூறினேன்.

அப்பொழுது அவனுடைய தகப்பனார், "ஹூட்ரோ, சகோ. பிரான்ஹாமை உனக்குத் தெரியாதா? இதோ அவர் வந்திருக்கிறார்" என்றார்.

அதற்கு அவன், "ஆ...ஆ...ஆ..." என்று முனகினான்.

அப்பொழுது அவனுடைய தகப்பனார் என்னை பார்த்து "பில்லி, நீங்கள் சற்று தாமதமாய் வந்து விட்டீர்கள்" என்று கூறினார். அப்பொழுது நான், "ஒரு போதும் நான் தாமதமாய் வரவில்லை

ஐயா, இயேசு இங்கிருக்கிறார்; இதற்காக நான் போராட வேண்டியிருந்தது" என்று கூறினேன்.

அங்கு அநேக பாவிகளான வாலிபர்களும், சொந்தக்காரர்களும் நின்று கொண்டிருந்தனர். அப்பொழுது நான், "வாலிபர்களே கவனியுங்கள். உங்களை ஆயத்தம் செய்து கொள்ளுங்கள். ஏனெனில் இந்த நிலைக்கு நீங்களும் ஒரு நாள் வரவேண்டியிருக்கும். பாருங்கள்? ஒரு வேளை இப்படிப்பட்ட புற்றுநோயின் மூலமாக, அல்லது மாறாக ஒரு வேளை நீங்கள் சாலையிலே விபத்தினால் இரத்தம் சிந்தி மரிக்கத்தக்கதாக இந்நிலைமைக்கு வரவேண்டியிருக்கும். நீங்கள் இந்நிலைக்கு வந்தாக வேண்டும்," என்று கூறினேன். நாங்கள் அவர்களிடத்தில் பேசினோம்.

நான் அங்கு சற்று நேரம் ஆவியானவர் எதைச் செய்ய சொல்வார்

என்று கவனித்துக் காத்திருந்தேன். நடந்த முதல் சம்பவம், எனக்கு ஒரு அசைவு ஏற்பட்டு, “உன் கைகளை அவன் மேல் வை” என்ற சத்தம் கேட்டது.


அப்பொழுது நான், அங்கு நடந்து சென்று, “நீங்களெல்லாரும் தலை வணங்குங்கள்” என்று கூறினேன். அவர்களெல்லாரும் அவ்விதமே செய்தார்கள். இரண்டு மூன்று வாலிபர் அங்கிருந்தனர்.

நான் என் கைகளை அவன் மேல் வைத்து, “தேவனாகிய கர்த்தாவே, தான் என்ன செய்யப் போகிறான் என்பதை அறியும் படிக்கு இந்த வாலிபனுக்கு சுயநினைவைத் தந்தருளும். ஏனெனில் இவன் இக்காரியத்தை சந்திக்க வேண்டியவனாயிருக்கிறான். பிசாசானவன் இவனைக் கட்டி வைத்திருக்கிறான். மரணம் நேரத்தக்கதாக இவன்

குடித்திருக்கிறான். இதோ இந்நிலைமையில் நீர் இவன் மேல் கிருபையாயிருக்கும்படி இவனுக்காக வேண்டிக்கொள்கிறேன்'' என்று ஜெபித்தேன். நான் அவனுக்காக ஜெபித்த பின்பு, அடுத்த நாள் காலையில், அவன் உட்கார்ந்தவனாய் தன் தகப்பனோடு பேசிக் கொண்டிருந்தான்.

★★★★★

# மரித்த பையன் உயிரோடு எழும்புதல்



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

செய்தி: முற்றிலுமானவர், டிசம்பர் 30, 1962, பத்தி எண் 328 - 335

பின்லாந்து தேசத்தில் அங்கே நின்று கொண்டிருக்கையில், அங்கே அச்சிறுவன் மரித்தவனாய் கிடக்கையில் நான் அவனைச் சுற்றி நடந்து சென்றேன். அவன் மரித்து அரைமணி நேரமாகி விட்டது. அதைப் பற்றி நீங்கள் புத்தகத்தில் வாசித்திருக்கிறீர்கள். நான் அவ்விடத்தை விட்டு கடந்து போக ஆரம்பித்தேன். ஏதோ ஒன்று என் மேல் தன் கரங்களை வைத்தது. நான் திரும்பினேன். "அது என்ன" என்று எனக்குள் சிந்தித்தேன். எனது வேதாகமத்தின் கடைசியில் உள்ள வெள்ளைத்தாளில், "இந்தக் காரியமானது வந்து சம்பவிக்கப் போகிறது. என்னவென்றால், ஒன்பது வயதுடைய ஒரு

சிறுவன் மோட்டார் வாகன விபத்தில் கொல்லப்படுவான். அந்த இடத்தில் ஆண்டு முழுவதும் பசுமையாகவே இருக்கும்; அந்த மோட்டார் வாகனமானது சாலைக்கு அப்பால் சேதமடைந்து இருக்கும். அச்சிறுவன் ஸ்டாக்கிங்ஸ் அணிந்திருப்பான், கிராப் செய்து முடி வெட்டியிருப்பான்; அவனது சிறிய கண்கள் பின்னாக திரும்பியிருக்கும், அவனது சரீரத்தின் எலும்புகள் நொறுங்கிப் போயிருக்கும், என்று எழுதப்பட்டிருந்தது.

நான் அவனைக் கவனித்தேன். "ஓ தேவனே" என்று எண்ணினேன்.

"யாவரும் அமைதியாக எழுந்து நில்லுங்கள்" என்றேன். அங்கே அந்நகர மேயர் கூட நின்று கொண்டிருந்தார். நான் கூறினேன். "இந்தச் சிறுவன் இப்பொழுதிலிருந்து இன்னும் இரண்டு

நிமிடங்களுக்குள் உயிரோடு எழுந்து தன் கால் ஊன்றி நிற்காவிடில், நான் ஒரு கள்ளத்தீர்க்கதரிசியாக இருப்பேன். என்னை ஃபின்லாந்து தேசத்தைவிட்டு துரத்தி விடுங்கள்'' என்றேன். நிச்சயமாகவே! ஆனால் அவன் அப்பொழுது எழுந்து நின்றுவிட்டான் என்றால், கிறிஸ்துவுக்கு உங்கள் ஜீவியங்கள் கடன்பட்டுள்ளன என்று கூறினேன். அவர்கள் யாவரும் அமைதியாக நின்றார்கள்.

நான், "பரம பிதாவே, இக்கடலுக்கு அப்பால், இரண்டு ஆண்டுக ளுக்கு முன்பாக, இந்தப் பையன் இங்கே இவ்வாறு மரித்துக்கிடப்பான் என்பதைக் கூறினீர்'' என்றேன்.

அங்கே சகோதரன் மூர் அவர்களும், சகோதரன் லிண்ட்சே அவர்களும் நின்று கொண்டிருந்தார்கள். அவர்கள் அதைப்

பார்த்துக் கொண்டிருந்தனர். எங்கும் யாவரும், தேசமெங்கிலும் ஆயிரக்கணக்கான வேதாகமங்களில் இந்த விஷயத்தை எழுதி வைத்திருந்தனர். அது என்னவாயிருந்தது? ஒரு முற்றிலுமானதாகும் அது.

பிதாவானவர் என்ன சம்பவிக்கும் என்பதை முன் கூட்டியே காண்பித்திருந்தார். அங்கே முற்றிலுமானவர் இருந்தபடியால், அங்கே நின்று கொண்டிருக்கையில் பயமேதும் இருக்கவில்லை. நிச்சயம் அவர் அவனை எழுப்புவார் என்று இருந்தது.

அந்த ஃபின்லாந்து தேசத்தில், ஆயிரக்கணக்கான மக்கள் இரவில் கூட்டங்களுக்கு வந்தனர். உள்ளே உட்கார இடம் போதவில்லை. வெளியே நின்றவர்களை உள்ளே உட்கார வைப்பதற்காக இருந்தவர்கள் வெளியே

போய் நின்று கொண்டனர். அவன் அங்கே நின்றிருந்தான். ஜனங்கள் யாவரும் என்னை நேசித்தார்கள். வியாதிகள் குணமாகுதலை அவர்கள் கண்டனர். ஆனால் இங்கே இச்சிறுவன் மரித்தவனாய் கிடந்தான். எது முற்றிலுமானதாக இருந்தது? அத்தரிசனம். "பிதாவானவர் செய்யக் கூறுவதெதுவோ அதையே நான் செய்கிறேன். ..... என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்த கிரியைகளை தானும் செய்வான்" என்றார். அங்கே தான் உங்களுடைய முற்றிலுமானது இருக்கிறது.

நான், "மரணமே, இனிமேலும் நீ இவனை பற்றிக் கொண்டிருக்க முடியாது. தேவன் பேசியிருக்கிறார், மீண்டும் உயிரடைய. மரணமே அவனை விட்டு நீங்கிப்போ" என்று கூறினேன். அச்சிறுவன் எழுந்து நின்று சுற்றிலும்

பார்த்தான். மக்கள் மயக்கமடையவும் செய்தனர்.

அந்த காரியமானது அந்நகர மேயரால் எழுதப்பட்டு, நோட்டரி பப்ளிக்கால் சான்றளிக்கப்பட்டுள்ளது. அது சரி தான்.

★★★★★

# ஜெப துணியினால் அற்புதம்



**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

## செய்தி: **இரண்டாம் அற்புதம்**,
51-0722 E பத்தி எண் 13,14

13. இப்பொழுது, நான் – நான் இந்த பெண்மணிக்கு ஒரு கைக்குட்டையை கொடுக்க வேண்டுமென்று அவள் விரும்பினாள், நான் அவளுக்கு அதைக் கொடுத்தேன், அவள், “இந்தக் கைக்குட்டையை ஆசீர்வதியும்” என்றாள். இப்பொழுது, அநேக ஜனங்கள் அவைகளை அபிஷேகிக்கிறார்கள். அதெல்லாம் சரிதான். தேவன் ஆசீர்வதிக்கிற எதுவாக இருந்தாலும், நான் அதற்காகவே இருக்கிறேன். ஆனால் நீங்கள் வேதவாக்கியத்தைக் கவனிப்பீர்களானால், பவுல்

அவைகளை அபிஷேகிக்கவில்லை, அவன் அவைகளை தன்னுடைய சரீரத்தை விட்டு எடுத்தான் (புரிகிறதா?), அவன் வெறுமனே அவைகளைத் தன்னுடைய சரீரத்தை விட்டு எடுத்தான். அதுவே சரி என்று நான் விசுவாசிக்கிறேன், இல்லையா, சகோதரர்களே? பவுல் அறிந்திருந்தான்...

சகோதரனே, அவன் அதை எங்கிருந்து பெற்றுக் கொண்டான் என்று நான் நினைக்கிறேன் என்பது உமக்குத் தெரியுமா? எலியா அதை எடுத்து இவ்வாறு கூறின போது தான் என்று நான் நினைக்கிறேன், அவன், “என் தடியைப் பிடித்துக் கொண்டு போய், அதை அந்தப் பிள்ளையின் மேல் வை” என்று கூறினான்.

உங்களுக்குப் புரிகிறதா? எலியா, தான் தொட்ட யாவுமே ஆசீர்வதிக்கப்பட்டன என்பதை அறிந்திருந்தான். ஆனால் அந்தப் பெண்மணி அதை விசுவாசித்தாளா இல்லையா என்பது... பவுல் உறுமால்களையும் (கைக்குட்டைகளையும்), கச்சைகளையும் தன்னுடைய சரீரத்திலிருந்து எடுத்து, வியாதிக்காரர் மேல் போட, அசுத்த ஆவிகள் அவர்களை விட்டுப் புறப்பட்டன, வியாதிகளும் சுகமாயின.

இப்பொழுது, அது பவுலாய் இருக்கவில்லை, அது தேவனாய் இருந்தது. அது தம்முடைய ஊழியக்காரன் மேல் ஜனங்களுக்கிருக்கிற விசுவாசத்தைக் கனப்படுத்துகிற தேவனாய் இருக்கிறது. நல்லது இப்பொழுது, அங்கேயிருந்த அதே தேவன் தான், நான் பரிசுத்த

பவுல் அல்ல, நம்மில் யாருமே பரிசுத்த பவுல் அல்ல, ஆனால் **அவர்** இன்னும் அதே இயேசுவாக இருக்கிறார். உங்களுக்குப் புரிகிறதா? எப்படியும் அது – அது பரிசுத்த பவுலாய் இருக்கவில்லை, ஆனால் அது இயேசுவாக இருந்தது.

14. இப்பொழுது, இந்தப் பெண்மணி அதை வாங்கி, தன்னுடைய வேதாகமத்தில் அதை வைத்தாள். அதற்கும் ஒரு சில வாரங்கள் கழித்து, அவள் ஒரு விளக்கின் சிம்னியை (lamp chimney - எண்ணையில் எரியும் விளக்குக்குப் பாதுகாப்பாக இருக்கும் குழல் போன்ற கண்ணாடி சாதனம்) சுத்தம் செய்து கொண்டிருந்தாள், அவள் அங்கே பின்னால் ஆர்கன்ஸாஸில் பருத்தி பயிரிடும்

தேசத்தில் (cotton country) இருந்தாள், அவள் அவ்வாறு சுத்தம் செய்து கொண்டிருந்த போது, அந்தப் பழைய விளக்கிலிருந்த சிம்னியின் கண்ணாடி உடைந்து அவளுடைய கையின் இரத்தக் குழாயை வெட்டிப் போட்டது. இப்பொழுது, இதுதான் அவளுடைய கதை. அவளிடம் ஒரு தலையணை உறை (pillow slip) இருந்தது, அதை வெட்டுப்பட்ட கையின் மேல் வைத்துப் பிடித்தாள், அது அப்படியே இரத்தத்தினால் ஈரமாகி விட்டது. அவளிடம் ஒரு நீண்ட துணி இருந்தது. அவளுடைய நெருங்கிய அண்டை வீட்டார் இரண்டு மைல்கள் தொலைவில் இருந்தனர்; அவளுடைய கணவனும் பட்டணத்தில் இருந்தான். அவளிடமிருந்து இரத்தம் வெளியேறிக்

கொண்டிருந்தது, அவள் பெலவீனமாகிக் கொண்டேயிருந்தாள், ஏதாவது நடக்காவிட்டால், அவள் சீக்கிரத்தில் மரிக்கப் போகிறாள் என்பதை அறிந்து கொண்டாள். அப்போது அந்தக் கைக்குட்டையைக் குறித்த நினைவு அவளுக்கு வந்தது; அவள் போய் அந்தக் கைக்குட்டையை எடுத்து வெட்டுப்பட்ட அந்த காயத்தின் மேல் வைத்தாள். இப்பொழுது, இதோ அவளுடைய சாட்சி. அன்று சாயங்காலத்தில் அவளுடைய கணவன் வந்த போது... அவள் ஏறக்குறைய இரண்டு மைல்கள் அல்லது அதற்கும் அதிகமான தூரம், புதைமிதியடியை (boots) அணிந்து கொண்டு சேறு வழியாக ஆழமற்ற நீரில் நடந்து வந்து, ஒரு கண்ணாடிக் கூட்டு விளக்கை

(lantern) மரத்தில் தொங்க விட்டு விட்டு, கிரேஹவுண்ட் பேருந்தைப் பிடித்து, நான் கூட்டம் நடத்திக் கொண்டிருந்த லிட்டில் ராக்கிற்கு வந்து இந்த புதைமிதியடியை அணிந்தவாறே உள்ளே நடந்து வந்து, அந்தக் கைக்குட்டையைப் பிடித்தவாறு தேவனை ஸ்தோத்தரித்தாள். அந்த கைக்குட்டை அழுக்காக கூட இல்லை, அது அப்படியே ஒரு அற்புதமாக இருந்தது, அது சரியாக அவ்விதமாக இரத்தம் வழிவதை நிறுத்தி விட்டிருந்தது. அந்தப் பெண்மணி மரித்துக் கொண்டிருந்தாள்; அவள் சென்று அவ்விதமாக செய்ய முடிந்த ஒரே காரியம் அது மாத்திரமே, அவள் அதைக் குறித்து அறிந்திருந்தாள், அவள் அவ்வாறு செய்த போது,

தேவன் அவளுடைய விசுவாசத்தைக் கனப்படுத்தினார்.



# இரத்த புற்று நோயிலிருந்து சுகம் பெற்ற இருவருடைய சாட்சி



**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

# செய்தி: நான்காம் முத்திரை, மார்ச், 21, 1963 மாலை, பத்தி எண் 9-17

நான் மேற்கு திசைக்குச் செல்லும் முன்பு, ஒரு சிறு பெண் ஒஹையோ **(Ohio)** பட்டிணத்தில் இரத்தப் புற்றுநோயால் **(Leukemia)** பீடிக்கப்பட்டுச் சாகும் தருவாயில் இருந்தாள். ஓ, அவள் பிழைப்பாள் என்ற நம்பிக்கை இல்லாமல் இருந்தது. இரத்தக் குழாய்களின் மூலம் அவளுக்கு ஆகாரம் செலுத்தப்பட்டது. அவள் மிகவும் எளிமையான குடும்பத்தைச் சேர்ந்தவள். ஆகவே அவர்கள்...

சகோதரன் கிட் **(Bro. Kidd)** என்பவரும் அவருடைய மனைவியும் கர்த்தர் எவ்விதம் ஜெபத்திற்குப் பதிலுரைக்கிறார் என்று அவர்களிடம்

எடுத்துக் கூறினப்போது அவர்கள் ஒரு வாடகை மோட்டார் வண்டியில் அந்த பெண்ணை இங்கு அழைத்து வந்தனர். அவள் ஏறக்குறைய ஆறு அல்லது ஏழு வயது சென்ற மிகவும் அழகுள்ள பெண்ணாக இருந்தாள். (ஒரு சகோதரி, 'ஒன்பது வயது' என்கிறார் – ஆசி) ஒன்பது வயது. அவளை அறைக்குள் கொண்டு சென்றனர்

ஆகவே, நாங்கள் கர்த்தருடைய சமூகத்தில் சென்றபோது, பரிசுத்த ஆவியானவர் நல்வாக்கு அருளினார். அவர் கூறியவாறே அவளுக்கு சாதாரண முறையில் வாய் வழியாக ஆகாரம் கொடுக்கப்பட்டது. முடிவில் அவள் அந்த இடத்தை விட்டுச் செல்லும் முன்பு ஹாம்பர்கர் (Hamburger) (ஒரு வகை மேற்கத்திய உணவு) வேண்டுமென்று அழுதாள். அவளுக்கு இயற்கையான

முறையில் வாய் வழியாக ஹாம்பர்கர் கொடுத்தார்கள்.

சில நாட்கள் சென்ற பிறகு டாக்டரிடம் அந்த பெண்ணைக் கொண்டு சென்றனர். என்ன நேர்ந்ததென்று அவருக்கு ஒன்றுமே புரியவில்லை. அந்த பெண்தான் அவள் என்று கண்டு கொள்ளக் கூடாத அளவிற்கு அவள் வித்தியாசமான தோற்றம் கொண்டவளாயிருந்தாள். இரத்தப் புற்றுநோயின் அடையாளம் அவளில் சிறிதேனும் காணப்படவில்லை என்பதாக டாக்டர் கூறினார். புற்று நோயினால் மரிக்கும் தருவாயிலிருந்து, எல்லாவித நம்பிக்கையும் அற்றுப்போய், இரத்தக்குழாய்களின் வழியாக ஆகாரம் செலுத்தப்பட்டு மஞ்சள் நிறமாய்க் காணப்பட்ட அதே பெண் இன்று மற்ற பிள்ளைகளுடன் பள்ளிக்கூடத்தில்

சந்தோஷமாக விளையாடிக் கொண்டிருக்கிறாள்.

இதைப் போன்று வேறொரு சம்பவம் எனக்கு ஞாபகம் வருகிறது. நான் அப்பொழுது தான் வீடு திரும்பியிருந்தேன். அங்கே..... அப்பொழுது கான்ஸாஸ் (Kansas) பட்டிணத்திலிருந்து இரத்த புற்றுநோயால் பீடிக்கப்பட்ட ஒரு பெண்ணைக் கொண்டு வந்தனர். அவர்கள் எபிஸ்கோபால் ஸ்தாபனத்தார் அல்லது பிரஸ்பிடேரியன்கள் என்று நினைக்கிறேன். டாக்டர்கள் அவளைக் கைவிட்டனர். 'இன்னும் நான்கு நாட்கள் மாத்திரமே அவள் பிழைத்திருப்பாள்' என்று அவர்கள் கூறியிருந்தனர். அவள் மிகவும் மோசமடைந்தாள். அந்த நான்கு நாட்கள் செல்வதற்கு முன், பனியை எவ்வாறாயினும் கடந்து இங்கு அடைந்து

விடலாம் என்று எண்ணங்கொண்டு அவர்கள் புறப்பட்டனர். அவள் பாட்டனார் தலை நரைத்து வயது சென்ற கம்பீரமான தோற்றத்தையுடைய ஒருவர்.

அவர்கள் இங்கு வந்து ஒரு விடுதியில் தங்கி ஏற்கனவே இரண்டு நாட்களாகிவிட்டன. அந்த விடுதி இப்பொழுது அங்கு இல்லை. அன்று விடியற்காலை ஜெபம் செய்வதற்கென நான் அங்கு சென்றிருந்தேன். முந்தின இரவுதான் நான் வீடு திரும்பியிருந்தேன். அங்கு சென்றபோது, அவள் பாட்டனார் அங்குமிங்கும் நடந்துகொண்டிருந்தார். அந்த தாயார் அந்த பெண்ணை கவனித்துக் கொள்ள முயன்றுக் கொண்டிருந்தாள்.

ஆகவே, ஜெபம் செய்ய நான் முழங்கால்படியிட்டபோது, அவள் பெற்றோர் புரிந்த ஒரு இரகசிய

செயலைப் பரிசுத்த ஆவியானவர் எனக்கு வெளிப்படுத்தினார். நான் அவர்களை ஒரு புறம் அழைத்து அது உண்மையாவென்று வினவினேன். அவர்கள் அழுது கொண்டே அது உண்மை தானென்று பதிலுரைத்தனர்.

பின்பு அந்தப் பெண் கயிறு வைத்து குதித்து விளையாடிக் கொண்டிருப்பதை நான் தரிசனத்தில் கண்டேன்.... ஆகவே, இப்பொழுது அந்தப் பெண்..... மூன்று வாரத்திற்குள் அந்த பெண் இரத்தப் புற்று நோயில்லாமல் பரிபூரண சுகமடைந்து, பள்ளிக்கூடத்தில் கயிறு வைத்து அவள் குதித்துக் கொண்டிருப்பது போன்ற ஒரு புகைப்படத்தை அவர்கள் அனுப்பியிருந்தனர்.


இப்பொழுது, இப்பொழுது, இந்த சாட்சிகள் அனைத்தும் முற்றிலும் உண்மையாகும். பாருங்கள் ஆகவே, நம்

தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார். நீங்கள் பாருங்கள், நாம் அவரைச் சேவித்து அவரில் விசுவாசம் கொள்ளுவோம். ஆகவே அவர் உண்மையுள்ளவர் என்பதை நானறிவேன்.

★★★★★

# இயற்கைக்கு மேம்பட்டவைகள் 7

## மிக மோசமாக படுகாயமடைந்த ஒப்பசம் மிருகம் சுகமடைதல்



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

~ 2 ~

# செய்தி: பதினோராவது கட்டளை, பத்தி எண் 9-12



இயற்கையுடன் நான் அன்பைக் கொண்டு தொடர்புகொள்ள இன்னொரு முறை இவ்விதமாக நிகழ்ந்தது: கடந்த கோடைக் காலத்தில் நான் என் அருமை நண்பர்கள்

லீயோ மற்றும் ஜீனுடன் வீட்டிற்கு முன்புறத்தில் உட்கார்ந்து, தேவனுடைய வார்த்தையை அவர்களுக்கு போதித்துக்கொண்டிருந்தேன். ஒரு தாயின் அன்பு என்ற பொருளின் பேரில் ஒரு ஆழமான பாடத்தில் நாங்கள் இருந்தோம். அக்காலை செய்தித்தாளில் ஒரு அழகான இளம் கறுப்பினப் பெண் முறைத்தவறி கருவுற்றிருந்த ஒரு குழந்தையை பெற்றெடுத்து ஒரு போர்வையில் சுற்றி அதை ஒஹியோ நதியின் பாலத்திற்கு கொண்டு சென்று அதை தண்ணீரில் போட்டுவிட்ட சம்பவம் பிரசுரிக்கப்பட்டிருந்தது. அதை ஒரு டாக்சிகார் ஓட்டுனர் சட்ட ஒழுங்கு அதிகாரிகளிடம் தெரிவித்தார், அவர்கள் அதை விசாரித்து அது உண்மை என்பதை கண்டுபிடித்தனர். அந்த பெண்ணிற்கு நிச்சயமாக அன்பு என்பது இல்லை – அந்த குழந்தையை பெற்றெடுத்த ஒரு பெண்ணாக மட்டும் அவள் இருந்தாள், ஆனால் அவள் தாய் அல்ல என்று அந்த காரியத்தைக் குறித்து நாங்கள் கருத்து பரிமாறிக் கொண்டிருந்தோம்.

அப்பொழுது வண்டிப்பாதையில் ஒரு ஒப்பசம் (ஒரு சிறு அமெரிக்க மிருகம் – தமிழாக்கியோன்) என்னும் சிறு மிருகம் வந்து கொண்டிருந்ததை நாங்கள் நேரடியாகக் கண்டோம். அது வேலிகள் இல்லாத மற்ற வீட்டு முற்றங்களைக் கடந்து வேலியிடப்பட்டிருந்த என் வீட்டு முற்றத்திற்கு, அது தன்னுடைய வழியை அறிந்து வைத்துள்ளது போல, நேராக வந்தது. அது வேலியின் கீழாக தவழ்ந்து தாண்ட முயலவில்லை, அது நேராக வண்டிப் பாதையிலே வந்து திரும்பி, நேராக என் வீட்டு முன்புறத்துக்கு வந்தது. நான் பையன்களிடம், "அதற்கு ராபீஸ் நோய் அல்லது வேறெதோ ஒன்று இருக்க வேண்டும், ஏனெனில் ஒப்பசம்கள் இரவில் தான் நடமாடும் – அவைகளால் பகலில் சரியாக பார்க்க முடியாது" என்றேன்.

அதைப் பார்க்கும் படியாக நாங்கள் அந்த வண்டிப்பாதைக்கு அருகில் சென்றோம். முந்தைய நாளில் சகோதரன் பாங்க்ஸ் உட்

விட்டுவிட்டிருந்த அந்த தோட்டத்தை சமப்படுத்தும் கட்டையை நான் எடுத்து பாதுகாப்பிற்காக அதன் மேல் கவனமாக வைத்தேன். அந்த மிருகம் வழக்கமாக செய்கின்ற காரியமான, இறந்தது போல பாசாங்கு செய்யாமல், அது அந்த கட்டையை கடிக்க ஆரம்பித்தது.




இது என்னை வியப்புக்குள்ளாக்கினது, ஏனெனில் அந்த ஒப்பசம் மிருகங்கள் ஒரு சிறு அபாய அடையாளத்தைக் கண்ட உடனே இறந்துவிட்டது போலப் பாசாங்கு செய்து

படுத்துகிடக்கும் – அது அதின் மூல வழக்கமாகும்.

நான் அதன் முதுகுப் புறமாகத்திரும்பிப் பார்த்தேன், அது மிக மோசமாக படுகாயமடைந்திருந்தது – அதின் கால் ஒன்று உடைந்திருந்திருந்தது, அதின் தலையில் ஒரு பக்கம் நசுக்கப்பட்டு, நசுக்கப்பட்ட பகுதி உறைந்து போன ரத்தத்தால் நிறைந்திருந்தது. அந்த காயத்தில் ஈக்கள் அமர்ந்து அதைப் பெரிதாக்கி, அதில் புழுக்கள் உருவாக ஏதுவானது. அது மிக மோசமாக கிருமிகளால் நிறைந்ததால், அழுகின மாமிச நாற்றம் போல நாற்றமெடுத்தது. அது சில நிமிடங்கள் குப்புறப்படுத்திருக்கையில் அது சுமந்து வந்திருந்த சிறு குட்டிகள், அதினுடைய குட்டிகளை வைக்கும் மதலைப் பையிலிருந்து வெளியே வந்துவிட்டன. அந்த ஓப்பசம் மிக பெலவீனமாக இருந்ததால் அதினுடைய மதலைப்பையை (pouch) நீண்ட நேரம் மூடிக்கொண்டிருக்க முடியவில்லை. அங்கே

ஒன்பது சிறு குட்டிகள் இருந்தன. அது தன்னுடைய சிறு குட்டிகளுக்கு பாலூட்டி அவைகளைப் பாதுகாக்க முயற்சித்துக் கொண்டிருந்தது. ஓ, அதை நினைத்துப் பாருங்கள், சரியா! அது தன் மரித்துக் கொண்டிருக்கிற நிலையிலும் பலம் குறைகின்ற நிலையிலும் தன்னுடைய சிறு குட்டிகளுக்கு பாலூட்டி அவைகளைக் காப்பாற்ற முயற்சித்துக் கொண்டிந்தது. நான் லீயோ மற்றும் ஜீனிடம், "இங்கே பாருங்கள் இளைஞர்களே, இது தான் உண்மையான தாய். இது தன் குழந்தைகளை காப்பாற்ற தன்னுடைய கடைசி மூச்சு வரை பிரயாசப்படுகிறது, ஆனால் அந்த கறுப்பு இன பெண்ணோ தன்னுடைய குழந்தையை ஆற்றில் போட்டு விட்டாள். ஒரு தாய் தன் குழந்தைக்கு பாராட்டுகிற உண்மையான தூய்மையான அன்பு இங்குள்ளது" என்றேன்.

ஓ, என் இருதயம் மிகவுமாக தொடப்பட்டது! அது மறுபடியுமாக எழுந்து நிற்க முயற்சித்தது, நான் அதை விட்டு விட்டேன், அது எழுந்து என் வீட்டை

நோக்கியிருந்த பாதையில் செல்ல ஆரம்பித்த போது நாங்கள் அங்கு நின்று அதை கவனித்துக் கொண்டிருந்தோம். அந்த ஒப்பசம் மிருகம் நேராக என்னுடைய வீட்டு முன் படிக்கட்டுப் படிகளில் சென்று சரிந்து விழுந்தது, அடுத்த அடியை அது எடுத்து வைக்கவே இல்லை. நாங்கள் அதனிடம் நடந்து சென்றோம், அப்பொழுது சகோதரன் மற்றும் சகோதரி உட்ஸ் வந்தார்கள். சகோதரி உட்ஸ் ஒரு கால்நடை மருத்துவம் தெரிந்தவர்களானபடியால் அவர்கள் என்னிடம், "அது பிழைக்க முடியாத அளவிற்கு மிக மோசமாக படுகாயமடைந்திருக்கிறது. ஆகவே சகோதரன் பிரன்ஹாமே நீங்கள் அதை கொன்று போடத்தான் வேண்டும்" என்று கூறினார்கள். நானோ, "ஓ என்னால் முடியாது!" என்றேன். அதற்கு அவர்கள், "இது மரிக்கத்தான் போகின்றது, அதன் குட்டிகள் பட்டினியால் சாகப் போகிறது, ஆகவே அந்த குட்டிகளை எடுத்து அவைகளை சீக்கிரமாக கொன்று விடுங்கள்" என்றார்கள். அவைகள் வேதனைப்பட

விடுவதைப் பார்க்கிலும், அவைகளைக் கொன்று விடுவது நலம் என்று என்னிடம் அவர்கள் உறுதியுடன் கூறினார்கள். ஆனால் ஓ, அவ்விதமாக என்னால் செய்ய முடியாது. ஆகவே அவர்கள் "சகோதரன் பிரன்ஹாமே, நீர் சென்று துப்பாக்கியைக் கொண்டு வந்து அந்த பரிதாபமான மிருகத்தை சுட்டுக் கொன்று விடுங்கள்" என்று கூறினார்கள். "இல்லை, சகோதரி உட்ஸ், அவ்விதம் செய்ய வேண்டும் என்று நான் நம்பவில்லை. என்னால் அதைச் செய்ய முடியாது" என்றேன். அதற்கு அவர்கள், "நீங்கள் ஒரு வேட்டைக்காரர் தானே?" என்றார். அதற்கு நான், "ஆமாம், ஆனால் நான் கொலை செய்பவன் அல்ல" என்றேன். அதற்கு அவர்கள், "நல்லது, என் கணவர் அவ்விதம் செய்யும்படி கூறுங்கள்" என்றார்கள். அந்த ஏற்பாடும் எனக்கு சரியானதாக தென்படவில்லை. ஆகவே நான், "சரி, நாம் சற்று காத்திருப்போம்" என்றேன்.

நாளானது கடந்து கொண்டிருந்தது, அன்று மாலை நான் என் குடும்பத்துடன் வெளியே சென்றேன். நாங்கள் திரும்பி வந்த போது, ஓ, அந்த ஒப்பசம் இன்னுமாக இருக்கின்றதா என்று காண நான் சென்றேன். அது அங்கே இருந்தது, முன்பிருந்ததை விட மரணத்தை அது நெருங்கி இருந்தது. அதற்கு சிறிது பலம் இருந்திருக்குமானால் இருட்ட ஆரம்பித்த உடனே அது புறப்பட்டுச் சென்றிருக்கும். ஏனெனில் அவை இரவில் நடமாடும் விலங்குகளாகும் என்பது எனக்குத் தெரியும் – ஆனால் அது அங்கே இன்னுமாக இருந்தது, அதன் குட்டிகள் பால் குடிக்க முயற்சித்துக் கொண்டிருந்தன. ஓ, காயம்பட்டு மரித்துக் கொண்டு படுத்திருந்த அந்த பரிதாபமான விலங்கிற்காக நான் மிகவும் வருத்தப்பட்டுக் கொண்டிருந்தேன்.


அடுத்த நாள் காலை என் மகள் ரெபெக்காள் என்னிடமாக வந்தாள். அப்பொழுது சுமார் காலை ஆறு மணி இருக்கும், நான் கர்த்தர் பேரில்

தியானிக்கத்தக்கதாக என்னுடைய அறைக்கு அப்பொழுது தான் சென்றிருந்தேன், அவள், “அப்பா, அந்த பாவமான தாய் ஓப்பசம் விலங்கை என் மனதிலிருந்து என்னால் எடுத்துப்போட முடியவில்லை” என்றாள். நான், “என்னாலும் அவ்விதமாகச் செய்யமுடியவில்லை பெக்கி” என்றேன். ஆகவே நாங்கள் அதைச் சென்று பார்க்க முடிவு செய்தோம், நாங்கள் அந்த அதிகாலை வேளையில் அங்கே நின்று அந்த மிருகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தோம், அதன் நிலைமை இன்னும் மோசமாகியிருந்தது - அதனுடைய சுவாசம் மிக குறைவாக இருந்ததால் அது சுவாசிக்கிறதா என்பதை கண்டுபிடிப்பதே அரிதாயிருந்தது. பெக்கி அழ ஆரம்பித்தாள். ஆகவே நாங்கள் உள்ளே சென்றோம். நான் அவளை திரும்பவுமாக படுக்கைக்கு அனுப்பினேன். நான் திரும்பி என் ஜெப அறைக்கு வந்து உட்கார்ந்து, “ஓ தேவனே, அந்த பரிதாபமான தாய் ஓப்பசம் எவ்வளவாக வேதனைப்பட்டுக் கொண்டிருக்கும் - அது எப்படியாக தன் குழந்தைகளை நேசிக்கிறது.

அது கொல்லப்படுவதை நான் காணவேண்டிய அவசியம் இருக்காது என நான் நம்புகிறேன்'' என்று நான் நினைத்தேன். நான் அங்கே உட்கார்ந்து கொண்டிருக்கையில் ஏதோ ஒன்று என்னிடம், ''நேற்று அந்த மிருகத்தைக் குறித்து பிரசங்கித்துக் கொண்டிருந்தாயே, நீ உன் பொருளுக்கு அதை உவமானமாகப் பயன்படுத்திக் கொண்டாயே'' என்று கூறினது. நான், ''அது சரிதான்'' என்றேன். ''அது தான் உண்மையான தாய் என்று நீ கூறினாயே'' நான் ''அது சரி தான்'' என்றேன், ''ஆனால் நான் அதை உன் கதவண்டை அனுப்பியிருக்கிறேன், அது உன் கதவண்டை ஒரு சீமாட்டியைப் போல இருபத்து நான்கு மணி நேரமாக தரித்திருந்து ஜெபிக்கப்படத்தக்கதாக தன்னுடைய தருணத்துக்காக காத்துக் கொண்டிருக்கிறதே, நீ இன்னும் ஒரு வார்த்தை கூட கூற வில்லையே.'' நான், ''நல்லது, நான்.....'' என்றேன். நான் ''யாரிடம் நான் பேசிக் கொண்டிருக்கிறேன்?'' எனக்கு நானே நான் பேசிக்கொண்டிருக்கிறேனா?'' என்று கூறினேன்.

நான் குதித்தெழுந்து, “ஓ, தேவனே, பேசுவது நீர் தானே?” என்றேன். நான் என் தலையைத் தாழ்த்தி “ஓ இரக்கமுள்ள தேவனே, அதை அறியாதிருக்கிற உம்முடைய தாழ்மையுள்ள ஊழியக்காரனை மன்னியும். அன்புள்ள தேவனே, நான் ஞானத்தில் குறைவுள்ளவனாகவும் புரிந்து கொள்வதில் மிகவும் மந்தமுள்ளவனாகவும் இருப்பதற்கு மிகவும் வருத்தப்படுகிறேன். அன்புள்ள தேவனே என்னை மன்னிக்க வேண்டுமென்று நான் ஜெபிக்கிறேன்” என்று அழுதேன். பிறகு நான் அந்த பரிதாபமான தாய் ஓப்பசத்திடம் ஓடி அந்த மிருகத்திற்கு அருகே முழங்காலிட்டு, அது திரும்பவும் குணமடைய, ஜெபிக்க, தேவனிடம் என் தலையை உயர்த்தினேன். ஏறக்குறைய ஜீவனே இல்லாத அந்த ஓப்பசத்தின் உடலின் மீது என் கையை வைத்து பயபக்தியுடன் ஜெபித்தேன். நான் மறுபடியாக காலூன்றி நிற்கையில் அதனுடைய சரீரத்தில் ஜீவன் புதிதாக வர ஆரம்பித்தது. அது குதித்தெழுந்து தன் குட்டிகளை ஒன்று சேர்த்து எடுத்துக்கொண்டு, “அன்புள்ள ஐயா,

உமக்கு நன்றி'' என்று கூறப்போவது போல என்னை நோக்கிப் பார்த்துவிட்டு புல்வெளியைக் கடந்து வண்டிப் பாதையை அடைய புறப்பட்டது. அது வண்டிப் பாதைக்கு சென்று, பிறகு திரும்பி, அது வந்த விதமாகவே சாலைக்குச் சென்று காட்டுக்குள் சென்றது! நான் மிகவுமாக களிகூர்ந்தேன். ஓ, எப்படியாக நான் தேவனைத் துதித்தேன்!



அந்த பரிதாபத்திற்குரிய ஒப்பசம் மிருகத்தை ஜெபத்திற்காக அவர் என் கதவண்டை வழி நடத்தினார், அதை ஜீவனுக்கென்று எழுப்பினார். பரிசுத்த


ஆவியானவர் வாசம் பண்ணத்தக்கதாக ஆத்துமா என்பதே இல்லாதிருக்கிற ஒரு மிருகம் – ஆனாலும் தேவன் தம்முடைய பலத்த கரத்தினால் அதை வழி நடத்தினார். எனக்குத் தெரிந்த வரையில் அது இன்றைக்கும் ஜீவித்து தன்னுடைய சிறு குடும்பத்தை எழுப்பிக் கொண்டிருக்கிறது.

தேவன், தம்முடைய பரிசுத்த ஆவியினாலே ஒரு சாதாரண ஊமையான ஒப்பசம் மிருகத்தின் ஜீவனானது காக்கப்படத்தக்கதாக, ஜெபத்திற்கு என்னிடமாக வழி நடத்துகிறாரென்றால், ஒரு ஒப்பச மிருகத்தைக் காட்டிலும் நீங்கள் எவ்வளவாக மதிப்புடையவர்களாயிருப்பீர்கள்? என் அருமை சகோதரரே, நீங்களும் ஜெபத்திற்காக இன்றிரவு இங்கே வந்திருக்கிறீர்களா? ஒரு ஒப்பசம் மிருகத்தை தேவன் எழுப்புகிறாரென்றால், நிச்சயமாக உங்களையும் அவராலே எழுப்பமுடியும். ஓ, நாம் நம்முடைய முழு இருதயத்தோடும் அவரை நோக்கிப் பார்ப்போமாக! வியாதிப்பட்டு இங்கே

படுத்திருக்கிறவர்களே, இராஜாதி இராஜா உங்களை நோக்கிப் பார்த்துக் கொண்டிருக்கிறார் என்பது உங்களுக்குத் தெரியுமா? கவலைப்படாதீர்கள், பயப்படாதீர்கள். “ஓ, நான் தேவனுக்கு முக்கியமில்லாதவன்” என்று நீங்கள் கூறலாம். ஆனால் நான் இதைக் கூறுகிறேன். நீங்கள் அவருடைய பிள்ளை, நீங்கள் தேவனுக்கு தேவையாயிருக்கிறீர்கள், அவர் உங்களை நேசிக்கிறார். அவர் இவ்வளவாக உங்களில் அன்பு கூர்ந்ததினால் தான் அவருடைய அன்பானது வெளிக்காண்பிக்கப்பட்டபோது, எல்லையற்ற ஒப்புயர்வற்ற கிருபையானது அதனுடைய இடத்தை எடுத்துக்கொண்டு, உங்களை தம்மிடமாக திரும்ப மீட்பதற்காக ஒரு இரட்சகரை அனுப்பியது; இந்த இரட்சகரில் அவர் நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டார். ஏனெனில் அவர் உங்களை நேசித்தார். தேவன் தம்முடைய மக்களின் உபத்திரவங்களை அவர் கண்டார். ஆகையால் அவருடைய தழும்புகளால் நீங்கள்

குணமாகிவிட்டீர்கள். தேவனுடைய கிருபையானது ஒரு வழியை உண்டாக்குகிறது. ஏனெனில் அவருடைய அன்பிற்கு அது தேவைப்படுகிறது. ஆகவே அவருடைய அன்பானது அவருடைய உணர்வுகளை வெளிக்காண்பித்தபோது கிறிஸ்து தம்முடைய இடத்தை எடுத்துக் கொள்ள புறப்பட்டு வந்தார். அந்த இடத்தை எடுத்துக்கொள்ள ஒரு காரியமானது தேவைப்பட்டது. அவருடைய அன்பானது உனக்காக தனியாக வந்தது, கிருபை உனக்காக ஒரு பலியை அளித்தது. இப்பொழுது நீங்கள் அதை விசுவாசிக்க மாத்திரமே கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள், "அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடைவான்" நீங்கள் அந்த காட்சியை பிடித்துக் கொள்ளுகிறீர்கள் என்று நான் நம்புகிறேன்.

# ஒரு சிறுமி ஹாட்ஜ்கின் வியாதியிலிருந்து சுகமடைதல்



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

## செய்தி: இதுவரை சண்டையிட்டவைகளில் மிகப்பெரிய யுத்தம், மார்ச் 11, 1962, பத்தி எண் 96-103

உயர்நிலைப்பள்ளியில் படிக்கும் ஒரு சிறுமி அண்மையில் அங்கு வந்திருந்தாள். அவளுடைய தாயார் தொலைப்பேசியில் என்னிடம், “என் பெண்ணுக்கு ‘ஹாட்ஜ்கின் வியாதி’ உள்ளது” என்றாள். (அது புற்றுநோய் வீக்கல் போல் வருவது) அவளுடைய தொண்டையிலிருந்த ஒரு வீக்கத்திலிருந்து ஒரு துண்டை எடுத்து மருத்துவர்கள் பரிசோதித்ததில், அது ஹாட்ஜ்கின் வியாதி என்று கண்டுபிடிக்கப்பட்டது.

எனவே மருத்துவர், “அடுத்த வீக்கம் ஒருக்கால் இருதயத்தில் தோன்றலாம்.

அப்படி நேர்ந்தால், அவள் மரித்துவிடுவாள். அது நேரிடும் வேகத்தைக் காணும்போது, அவள் இன்னும் மூன்று மாதங்கள் மாத்திரமே உயிர் வாழ்வாள்'' என்றார்.

தாய், “நான் என்ன செய்ய வேண்டும்? அவளை பள்ளிக்கு அனுப்பலாமா?'' என்று மருத்துவரைக் கேட்டாள்.

மருத்துவர், “அவள் போய்க்கொண்டிருக்கட்டும். அவள் திடீரென்று மரித்துவிடுவாள். அவள் பள்ளிக்குப் போய், சாதாரண வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கட்டும். அவளிடம் இதைக் குறித்து ஒன்றும் சொல்ல வேண்டாம்'' என்றார்.

எனவே அந்தத் தாய் என்னிடம், “நான் என்ன செய்ய வேண்டும்'' என்று கேட்டாள்.

நான், “அவளைக் கொண்டுவந்து ஜெபவரிசையில் நிறுத்துங்கள். நீங்களும் அவளுடன் வாருங்கள்” என்று கூறினேன். எனக்கு வினோதமான ஒரு உணர்ச்சி ஏற்பட்டது.

அந்த சிறுபெண் அன்று காலையில், சாயம் தீட்டியதால், நீல நிற உதடுகளுடன் – அவர்களுடைய பள்ளி அதை நியமித்துள்ளது. அந்த சிறுமி அங்கு வந்தாள் (அவள் யாரென்று எனக்குத் தெரியாது. என்னுடன் தொலைப்பேசியில் தான் அவர்கள் பேசினார்கள்). நான் அவள் கைகைப் பிடித்து, “காலை வணக்கம், சகோதரியே” என்றேன். அது அவள் தான். ஒரு சில நிமிடங்களில், அவர்களிருவரும் தேவனற்றவர்களாய் கிறிஸ்துவற்றவர்களாய் இருப்பதை உணர்ந்து கொண்டேன். நான் “இந்த நிலையில் நீங்கள் எப்படி சுகத்தை

எதிர்பார்க்கமுடியும்? நீங்கள் இயேசு கிறிஸ்துவை உங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்வீர்களா? இந்த குளத்திற்கு வந்து, உங்கள் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்வீர்களா?" என்று கேட்டேன்.

அவர்கள், "நாங்கள் அப்படியே செய்வோம்" என்றனர்.

ஓ, என்ன நேர்ந்தது தெரியுமா? ஒருக்கால் அந்த ஸ்திரீ இன்று காலை இங்கு அமர்ந்திருக்கலாம். உங்களில் அநேகருக்கு அந்த 'கேஸ்' (case)ஸைக் குறித்து தெரியும். இங்குள்ள தர்மகர்த்தாக்களில் ஒருவரான சகோ. மைக் ஈகன் இந்த 'கேஸ்'ஸை நேரடியாகப் பார்த்தார். அது நான்கு, ஐந்து ஆண்டுகளுக்கு முன்னால் நடந்தது. அந்த பெண் மறுபடியும் மருத்துவரிடம்

அழைத்துச் செல்லப்பட்டாள். ஹாட்ஜ்கின் வியாதி சிறிதளவுகூட அவளில் காணப்படவில்லை.

★★★★★

# ஒரு பையன் கீல்வாத ஜுரத்திலிருந்து சுகமடைதல்



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# செய்தி: ஐந்தாம் முத்திரை, மார்ச்சு, 22, 1963, பத்தி எண் 10-18

சில நாட்களுக்கு முன்பு, நான் இப்பொழுது தங்கியிருக்கும் அரிசோனா (Arisona) பட்டினத்தில் இருந்தபோது, ஒரு சிறு பையன் கீல்வாத ஜுரத்தினால் (Rheumatic fever) அவதியுறுகிறான் என்றும், அது அவனுடைய இருதயத்தைப் பாதித்துள்ளது என்றும் எனக்கு அறிவிக்கப்பட்டது. அவனுடைய பெற்றோர் எனது ஆப்த நண்பர்கள். அவர் நம் சபையில் ஒரு மூப்பராக இருக்கிறார். சகோ. காலின்ஸ் (Bro. Collins) அவர் சிறிய பையன், மிக்கி (Mikie) (அவன் ஜோவின் விளையாட்டுத்தோழன்) இருதய கீல் வாத ஜுரத்தினால் அவதியுற்றான்.

வைத்தியர்கள் அவனை வீட்டுக்கு அனுப்பி வைத்து, அவன் படுக்கையிலேயே படுத்திருக்க வேண்டுமென்றும், தண்ணீர் குடிப்பதற்குங் கூட அவன் எழுந்திருக்கக் கூடாதென்றும், ஒரு வைக்கோல் குழாய் (Straw) வழியாய் அவன் தண்ணீர் குடிக்க வேண்டுமென்றும் பெற்றோருக்கு உத்தரவிட்டிருந்தனர். அவனுடைய நிலைமை அவ்வளவு மோசமாயிருந்தது. அவன் பெற்றோர் நம் கூடாரத்திற்கு வரும் விசுவாசிகள்.

சில நாட்களுக்கு முன்னர், ஞாயிறன்று சுகமளிக்கும் ஆராதனை ஒன்று நடத்தப்போவதாக உங்களுக்கு அறிவிக்கப்பட்டது. ஆனால் உங்கள் கேள்விகளுக்கு பதிலளிக்க வேண்டுமெனக் கருதி சுகமளிக்கும்

ஆராதனை நடத்த வேண்டாமென்று நாங்கள் முடிவு செய்தோம்.

ஆனால் ஒரு சிறு விஷயத்தை மாத்திரம் என் இருதயத்துக்குள் நான் வைத்துக் கொண்டிருந்தேன்.

அந்தப் பையனின் பெற்றோர் என்னிடம் வந்து, அவனை கூடார அறைக்குள் கொண்டு வரலாமா என்று கேட்டனர். அவன் அங்கு கொண்டு வரப்பட்ட போது அவன் சுகமடைந்து விட்டதாக பரிசுத்த ஆவியானவர் அறிவித்தார்.

ஆகவே, பரிசுத்த ஆவியானவர் கூறியதை பெற்றோர் விசுவாசித்து, சிறுவனை பள்ளிக்கூடத்திற்கு அனுப்பினார்கள்.

வைத்தியர் அதை அறிந்தார். அது அவருக்கு அதிருப்தியை உண்டாக்கியது.

அவர் தாயாரிடம், சிறுவன் படுக்கையிலிருக்க வேண்டுமென்று மறுபடியும் கூறினார். அந்த அம்மாள் வைத்தியரிடம் நடந்ததை விவரமாகக் கூறினாள். அந்த வைத்தியர் ஏழாம் நாள் ஆசரிப்பு ஸ்தாபனத்தைச் சேர்ந்தவர் என்று நினைக்கிறேன். அவர் தாயாரிடம், ‘சிறுவனை நான் பரிசோதித்தாவது பார்க்கட்டும்’ என்றார்.

அவளும் ‘மிக நல்லது’ என்று கூறினாள்.

அந்த இருதய கீல்வாத ஜுரம் எங்குள்ளது என்று பரிசோதிக்க அவனை இரத்த பரிசோதனைக்காகக் கொண்டு சென்றனர். வைத்தியர் மிகவும் அதிசயமுற்றார் என்று நான் அறிகிறேன். என்ன செய்வதென்றே அவருக்குத் தெரியவில்லை. அந்தச் சிறு பையன்

முற்றிலும் குணமடைந்து விட்டான். ஒன்றும்...?... காணப்படவில்லை.

இப்பொழுது சகோதரன் காலின்ஸ், சகோதரி காலின்ஸ் இங்கு உள்ளனரா? நான் ஒருவேளை அதை தவறாகக் கூறியிருக்கலாம். நான் விரும்புவது... சகோதரி காலின்ஸ், அது சரியா? ஆம். சரி, ஆம். அதோ, அந்த ஏழு வயது சிறுவனான மிக்கி காலின்ஸ்,

மூன்று நாட்களுக்கு முன்பு அது இந்த அறையில் சம்பவித்தது. ஓ! அவர்கள்... அந்த அறையில் மனிதரைத் தவிர வேறு யாராவது இருக்கவேண்டும். அவர்தான் தம் வார்த்தையை கௌரவிக்க அங்கு வரும் மகத்தான வல்லமையுள்ள யெகோவா. அது சரி. இந்த சாட்சியைக் கேட்டதற்காக நான் நன்றியுள்ளவனாயிருக்கிறேன். பாருங்கள்?

நான் மாத்திரமல்ல, நீங்கள் எல்லோருமே நன்றியுள்ளவர்களாயிருக்கிறீர்கள். ஏனெனில், அது உங்கள் சிறுவனாயிருந்தால் என்ன, அல்லது என்னுடைய சிறுவனாய் இருந்தால் என்ன?

★★★★★

**வேதாகமம், "அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்கிறவர்கள் யாவரும் துன்பப்படுவார்கள்" என்று கூறுகின்றது. ஆகவே கிறிஸ்துவுக்காக நீங்கள் துன்பங்கள் படவில்லையெனில் அப்படியானால் ஏதோ தவறு ஒன்று இருக்கின்றது.**

**செய்தி: எல்லாவற்றையும் விட்டுவிடுதல், ஜனவரி 23, 1962**

**Only believe,**
**Only believe**
**All things are possible,**
**Only believe.**

**சகோ. பினேகாஸ்**
போன்: 8838623242,
9551855108
Email: jebakumarsa@gmail.com
www.thefinish.in